


# 31ம் நாள் நினைவுமலர்

# உள்ளக்கமலம்

## அமரர். திரு. கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்

அவர்களின்

## 31ம் நாள் நினைவு தினம்


30.07.2017 ஞாயிற்றுக்கிழமை




# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து, கலங்கரை விளக்காய் நின்று துலங்க வழி காட்டி, நலங்கள் அனைத்தும் நாங்கள் பெறத் துணிவூட்டி, நான் எனும் அகந்தை அகமதில் பற்றாது அகற்றி, வாழ்வின் வளத்திற்கு சிந்தித்து சிறந்தன வெல்லாம் செய்து, வையத்தில் நாங்கள் வளமாக வாழ வழி சமைத்து, அன்பின் நிருவுருவாய் ஆருயிர் தெய்வமாய் விளங்கி என்றும் குடும்பவிருட்ச ஆணி வேராய் இன்ப நிழல் பரப்பி எங்கள் மனம்விட்டு அகலாத மாமனித தெய்வத்தின் பொற்பாதக் கமலங்களுக்கு இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

என்றென்றும்
உங்கள் நினைவில் வாடும்,



மனைவி, மக்கள்,
மருமக்கள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.



அமரர். திரு.

# கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்

(ஈழத்தின் பிரபல எழுத்தாளர், கல்வியியல் கல்லூரி முன்னாள் பதிவாளர்,
இரஷ்ய, லெபனான் நாடுகளுக்கான இலங்கை தூதரக ஓய்வுபெற்ற அதிகாரி)

**மண் மகிழ** | **மனம் நெகிழ**
---|---
**06.04.1946** | **30.06.2017**

## திதி வெண்பா

ஏவிளம்பி யாண்டு சாதனையாள சபாரெத்தினம்
ஆனித்திங்கள் பதினாறாம் நாள் - ஆனியுத்தர
நட்சத்திர சித்தாமிர்த யோக வேளையில்
நண்பகல் நலமாய் சிவனடி சேர்ந்தார் காண்.



உ
சிவமயம்

## விநாயகர் வணக்கம்

அத்தி முகவனை நித்த நினைப்பவர்
சித்த மகிழ்வொடு முத்தி பெறுபவரே,

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி விளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## பஞ்ச புராணம்

### தேவாரம்

துணிவளர் திங்கள் துலங்கிவிளங்கச் சுடர்சடை சுற்றிமுடித்துப்
பணிவாளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலம் எலாம் செய்து பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர் மாண்பே

### திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன் விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யானென்னைக் கண்டு கொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரல்மணிக்குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அரிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமை கோனடி
யோமுக்கு அருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறி தந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

## புராணம்

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மையா மெனின் உலகவர்முன் வருகென உரைப்பார்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா(து) உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்.

## சைவ சமயச்சிறப்பு

சைவ சமயமே சமயம் சமயா தீதப் பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமநெறி புகுத வேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே.

(தாயுமானவர்)

சைவத்தின்மேற் சமயம் வேறில்லை
அதிற் சார் சிவமாம்
தெய்வத்தின் மேற் தெய்வம் வேறில்லை
நான்மறைச் செம்பொருள் வாய்
மைவைத்த சீர்திருத் தேவார
முந்திரு வாச கமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்
பெற்றா ளெம்முயிர்த் துணையே.



# சகலகலா வல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்களன் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சகமேழும் அளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தேன்அமு(து)
ஆர்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்(கு) என்றுகூடும்
கொலோஉளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப்பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சுஅப்பு இதம்தரு செய்யபொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்(து)அல ராத(து) என்
னேநெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்செந்
நாவும்அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி(சு) ஒத்(து) இருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய்எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும்என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய்உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமும் அவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந்து அடிமைகொள்
வாய்நளி னாசனம்சேர்
செல்விக்(கு) அரி(து) என்று ஒருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.



# நவக்கிரஹ தோஷம் நீங்க ஸ்ரீ ராம ஜெயம்

## சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறையிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தத் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி

## வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
கரக தோசமின்றிக் கடாக்ஷித் தருள்வாய்

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்ர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம் வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா

## இராகு

அரவெனும் இராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி

# வாழ்க்கைச் சரிதம்


வாவிகள் கடலொடு வளமான களனிகள் சூழ்ந்த
ஆவினம் பயிர்வகைகள் அளவிலாச் செல்வம் நிறைந்த
கோவில் குளங்கள் குன்றாத கலைவளம் மலிந்த
பாவினங்கள் பக்தியோடுநாளு மெட்டுத்திக்கு மொலிக்கின்ற
ஓவியமாம் மட்டுமாநகரெனு மகிழை நகர் தெற்கே
பத்துக் கிலோமீற்றருக்கு அப்பால் அமைத்த
காவிய காவடிகரக கும்பி தாலாட்டுப் பாட்டு
கவினுறு இருமோடிக் கூத்துக்கள் மகுடி வசந்தனாட்டு
கவிவாணர் பாவாணர் இசையாளர் நிறைந்து வாழும் பதி
பண்டை வழிப் பாடலெல்லாம் இன்னும் நிலவும் பதி
பண்டை முன்னோர் மரபு படிப்படியாய் காக்கும் பதி
பண்டை நிகழ்வைச் சடங்காயாற்று பழந்தமிழ் பெரும் பதி
அன்போடறம் ஆன்மீகம் அழியா யாரயம் பதியிலே
பல்துறைப் பாண்டித்திய பரம்பரை நாகப்பர் கணபதிப்பிள்ளை
என்ற தலைமையாசிரியருக்கும் தங்கமணியம்பாளெனும்
இல்லத்தரசியார்க்கு இரண்டாவது இன்ப மகனாக
சித்திரைமாத மாறாந்திகதி யாயிரத்து தொளாயிரத்து
நாற்பத்தாறா மாண்டு நானிலம் போற்று மிந்த
காவிய மாமனித சபாரெத்தினம் கண்மலர்ந்தார்.
நாளொருமேனி பொழுதொரு வண்ணம் வளர்ந்து
துள்ளி நடந்து பள்ளிப்பருவமடைந்து கல்விகற்க
ஆரம்பக் கல்வியதை ஆரைப்பற்றை ஆர்.கே.எம்மிலும்
தரம் நான்கு காத்தான்குடி மு. ஆண்கள் பாடசாலையிலும்
ஆங்கில மூலஇடைநிலைக் கல்வியைச் சிவானந்தாவிலும்
கற்றுத் தேறி எழுதுவினைஞர் பரீட்சை சித்தியும் பெற்று
மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் கச்சிதமாய்க் கடமையாற்றி
பல்வேறு திணைக்களங்களில் நேர்மை நேர்த்தியுடன் பணிபுரிந்து

வந்திடு அனைவரையும் அன்போடாதரவுடன் அணுகி சேவை செய்து
நெஞ்சுறுதி நேர்மைத் திறனும் கண்டு பணியாளர்கள் வியந்து
அநீதிக்கடி பணியா ஆற்றும் சேவை கண்டுமே போற்றி
ஊழலுக்கு உறுதுணையாகா உறுதி கண்டவர்கலேற்ற
ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு மூன்று இரண்டதன்று
அன்பால் பண்பால் குணத்தாலுயர் குடும்பத் தலைவ தபால்
அதிபர் சீரிய சீனித்தம்பி இராசம்மா தம்பதியினரினிரண்டாம்
புத்திரி நித்தில சத்தியபாபா கைத்தலம் கனிவோடு பற்றி
இத்தரை வள்ளுவன் வாசுகி போலன்பா யில்லறம் நடத்தி
பெற்றிட்ட இருகண்கள் சண்முகப்பிரியா, சத்தியப்பிரியா
ஏற்ற மிறக்க மின்றி யிருவரையும் கல்வி கற்றிட
இயன்றவரை முயன்றோர் தந்தை மக்களுக் காற்றுமுதவி
பயனுறவளித்து உயர்தரக் கல்வி சித்திபெற வைத்து
வெளிநாட்டுத் தூதரகப் பணிபுரி பரீட்சையில் தேறி
ரஷியா நாட்டு மொஸ்கோ தூதரகத்தில் அதிகாரி
யாக சென்று வருடங்கள் ஐந்து கடமையாற்றிய காலை
ஆங்காங்கு நடைபெறுமனைத்தையும் மனதில் பதித்து
அனுபவ வறிவால் 'மொஸ்கோ அனுபவங்கள்' ஆக்கியளித்து
அனைத்துலகிலு முன்பெயரை அழியாக் கோலமாய்ப் பதித்து
அடுத்து லெபனான் தூதரகத்திலு எட்டு வருட சேவைசெய்து
நற்பெயருடன் நாடு திரும்பி வந்திரு பெண்பிள்ளைகளை
குவலயம் மதிக்க குறைவில்லா வாழ்வு வாழவைத்து
வளமாக அவர்கள் வாழ வசதிகள் பற்பல ஏற்படுத்தி
புத்தக அற்புத உலக வாசலைத் திறந்து காட்டி
உத்தம கற்ற மூத்த மாப்பிள்ளை சுத்தமன சுரேந்திரகுமார்
வித்தகக் கணக்காளர் விவேக விளைய மருமன் ரூபாகரன்
நல்லிதயத் தந்தையாக நாடித் தேடித் திருமணம் முடித்து
மூத்த பேரன் சிவசன் மேல் பேரன்பு வைத்து நாளும்
விரும்பும் பொருட்களை எவ்விலை கொடுத்தும் வாங்கி

மாறாத பாசமதை மனத்திலே தீராததாகமாய் திரட்டிவைத்து
ஓயாது பேரனுடன் கூடிவிளையாடி மகிழவைத்து ரசித்து
மட்/ தேசிய கல்வியியல் கல்லூரியிலும் பதிவாளராய் பணியாற்றி
இத்தனை வேலைப் பளு மத்தியிலு மில்லற வாழ்வை யினிதாக்கி
மெத்தப் பொறுப்புடனே மேன்மையுற செய்து ஓய்வு
பெற்ற பின்பும் பற்பல சமூகப்பணிகள் தொடர்ந்து செய்து
நற்றமிழ்க் கவிதை, கட்டுரை, சிறுகதை, சிறுவரிலக்கியம்
அப்பப்பா வெத்தனை நற்சீர்திருத்த நாடகங்கள் படைத் தளித்து
ஆங்கிலக் கட்டுரைகள் ஆக்கங்கள் ஆர்வமதாகவாக்கி
ஆரையம்பதி மண்ணுக்கே அழியாத புகழ் படைத்த வேளை
உள்ளத்தில் வைராக்கியத்தோடு உலகப் பற்றறுத்து
சொல்லதனால் இது தான் நடக்கும் துயரதனை விடுத்து
எல்லாம் இறைசெயலே ஏங்காதீரென இடித்துரைத்து
ஏவிளம்பி வருடம் ஆனித்திங்கள் பதினாறாம் நாளிலே
ஈராயிரத்து பதினேழு ஆறாம் மாத முப்பதாந் திகதியன்று
ஆனியுத்தர நட்சத்திர சித்தாமிர்த யோக வேளையிலே
சூழ்ந்து மனைவி, மக்கள், சகோதரி துயரமுடன் கலங்க
கூற்றுவனிறையடி வீற்றிருக்க அழைத்ததனாலே
ஏகினீரோ இப்புவிவிட்டிறைவனடி நிழல் வீற்றிருக்க
உங்கள் ஆற்றல் அறிவுத்திறன் முற்றாக உரைப்பதாயின்
திண்ணமாய்ச் சொன்னா லச்செயலானது முடிவிலியாகும்
எத்தனை காலங்கள் இப்புவியிலுறுண்டு ஓடினாலும்
நித்திலம் நிலைத்திருக்கும் வரை யுங்கள் நினைவலைகள்
அத்திப்பட்டிக் கிராமமா யழியாது ஆரையம்பதி மண்ணது
உள்ள வரைக்கும் உறுதியுடனே நிச்சயம் நிலைத்திருக்கும்
உள்ளத்தால் வேண்டி நிற்கின்றோ முங்கள் ஆத்ம சாந்தியை!

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

குடும்பத்தினர்.



1982இல் திருமணத்தின் போது



தனது மனைவி, பிள்ளைகளுடன்

# மனைவி மனத்துயர்

திருமணம் முடித்த நாளிலிருந்து - ஒருவருள்
ஒருவராய் ஒன்றியே வாழ்ந்திருந்தோம்
ஒருகுறையும் வைக்காது - திருவோடு
அருமையான வாழ்வு இருவரும் வாழ்ந்தோம்.
உத்தம குணத்தோடு வாழ்ந்து - நித்தம்
மெத்த மனத்தோடு உறவுகளைப் பேணி
எத்தனையோ செல்வங்கள் தேடி - சொத்து
அத்தனையும் அறவழியில் ஈட்டினீர்கள்.

பெற்ற பெண்பிள்ளைகளுக்கு - உற்ற
நற்றுணையாக நானிலத்தில் வாழ
கற்றிட நல்வழி காட்டியே - சற்றும்
வற்றிடா அன்போடு வாழவைத்தீரே.
எல்லாமே சேர்த்து அவர்களுக்கு - நல்ல
இல்லத் தரசுகளாய் வாழ வேண்டி
சொல்லாலன்றிச் செயலால் - வல்ல
மாப்பிள்ளைகளை மணம்முடித்து வைத்தீரே

பொல்லாத கூற்றுவன் வாழ்விலின்று - நல்லா
வாழ்ந்திட வேண்டிய வேளை பார்த் தழைக்க
சொல்லொன்னா துன்பத்திலாழ்ந்து - எல்லாம்
இருந்தும் நீங்களில்லா வாழ் வெதற்கு!

வாழ்ந்த வாழ்வின் அன்புதனை - ஆழ்ந்த
வார்த்தைகளால் அளவிட முடியாதப்பா
எப்பொழுதும் என்னிதய தெய்வம் - நீங்கள்
இன்புற்று இறையடிசேர இறையினை வேண்டுவேனப்பா!

**திருமதி. ச. சத்தியபாமா.**

# விருட்சத்திற்கு விழுதின் அர்ப்பணம்

எனது உலகமே என் அப்பா தான். என் அப்பாவுடனான சர்க்கரைப் பொழுதுகள்... என் மனதில் இன்றும் இளமையாகவே நிழலாடுகின்றன. என் வாழ்வில் இரவில் கூட வெளிச்சமாய் இருந்த நீங்கள் பகலில் மறைந்து என்னை இருளாக்கி விட்டீர்களே...! விம்மி வெடிக்கும் வேதனைகளுக்கிடையில் என்னால் எழுதமுடியவில்லை என் வார்த்தைகள் நொண்டுகின்றன.....

தந்தைக்கு இலக்கணம் தரணியில் நீங்கள் தானப்பா ! தப்பாமல் உங்கள் வார்த்தைகளை எப்போதும் கேட்டிடுவேன். உற்ற உறவுகளுக்கு தந்தையாய், சகோதரனாய், கணவனாய், மாமனாய், தாத்தாவாய் அத்தனை பாத்திரங்களுக்கும் மொத்த வடிவம் தந்த பாத்திரப் படைப்பின் பொக்கிஷம் நீங்கள் தானப்பா. "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பதற்கமைய, தங்கையும் நானும் தந்தையாம் உங்கள் வழியில் பின் தொடரும் பொழுதுகள் எத்தனை மன நிறைவப்பா !அற்புதமே அகிலத்தில் நீங்கள் தானப்பா ! ஆலயம் சென்று ஆண்டவனை நானும் தங்கையும் வணங்கியதை விட அகிலம் போற்றும் உத்தமராம் தங்களையே எங்களது ஆண்டவனாக கண்டு தொழுதேற்றிய நாட்களே அதிகமப்பா. நாமடைந்த ஆனந்தமும் அதுவே தானப்பா!

ஆளுமையின் பெட்டகமே நீங்கள் தானப்பா, எங்களது வாழ்வின் முதல் ஆசானும் நீங்களே தானப்பா. என்னை தங்கள் தோளில் சுமந்து தெய்வத் திருவிழாவைக் காட்டிய பொழுதுகள் அற்புதமானவை இப்போது நினைக்கிறேன் தெய்வத்தின் தோளிலிருந்து நான் தெய்வத்தை பார்த்திருக்கிறேனே!

என் கலங்கரை விளக்கு காட்டிய பாதைகள் வார்த்தைகளுக்கு எட்டாதவை... விமான நிலையத்துள் நுழைந்து வெளியேறுவது வரைக்குமான நீங்கள் எனக்கனுப்பிய விளக்க வரைபடக் கடிதம் என் வாழ்வில் மறக்க முடியாதப்பா ! தங்களது இராஜதந்திர சேவையினால்

எங்களை இராணிகளாக்கியவர் நீங்கள் தானப்பா ! உங்களது அர்த்தமுள்ள ஆங்கில வார்த்தை கேட்டு ஆங்கிலேயன் கூட தன் புருவம் உயர்த்தியது கண்டு எத்தனை தடவைகள் எனக்குள் பெருமையுற்றிருப்பேன்.

மண்ணில் பிறந்து மகத்தான மனிதனாய் வாழ்ந்ததன் பயனால் தானப்பா, உங்களுக்கும் எங்களுக்கும் பொருத்தமாய் எனக்கும் அவளுக்கும் இணக்கமாய் மருகர்கள் இருவரை எங்கள் வாழ்வு வளம் பெற வழிசமைத்திட்டீர்கள் ; வாழ்வாங்கு வாழவும் கற்றுத் தந்துவிட்டீர்கள்.

அப்பா... நீங்கள் நோயுற்ற வேளை என் கணவன் வேறு ஒரு தாயின் வயிற்றில் பிறந்திருந்தும் உங்களை தன் தந்தை போலவே நினைத்து கடமை செய்து உங்களுக்கு மகனில்லை என்ற குறையே ஏற்படாதபடி உங்கள் உடனிருந்து பார்த்துக் கொண்டார். இதற்கெல்லாம் காரணம் நீங்களொரு தெய்வமப்பா !

என் மகனின் வாழ்வு ஏற்றம் காண வேண்டி நீங்கள் பட்டபாடுகளை நினைக்கும் போது என் கண்களில் நீர் நிரம்புகிறது, உள்ளமெல்லாம் நிறைகிறது. உங்கள் ஆசி எங்கள் குடும்பத்திற்கு என்றுமே நிலைத்திருக்கும்.

அந்நிய நாடுகளில் அடிமைச் சுதந்திரம் பற்றி ஆங்கில வார்த்தைகளால் ஆணித்தரமாய் ஆற்றிய உரைகளை அருகிருந்து அவதானித்த அந்தப் பொழுதுகள் மீண்டும் எப்போதப்பா ! கடமைகள் அத்தனையும் கச்சிதமாய் முடித்திட்டீர் காலனவன் உங்களை கடுகதியில் கவர்ந்ததை நினைத்து காலமெல்லாம் கரைந்தழுகின்றேன். தங்கை வயிற்றிலோ தமக்கை என் வயிற்றிலோ கருவாக உருவாகி நீங்கள், எம் வாழ்வோடு எப்போதும் பிரியாமலிருங்கள் அப்பா.... பிரியா, தங்களிடமும் தாங்களே எனக்கு காட்டிய அந்த கடவுளிடமும் கேட்கிறேன்.... அப்பா எனக்கு எப்பவும் நீங்க தான் வேணும்....."

அன்புடன், உங்கள் மூத்த மகள்,
திருமதி. சண்முகப்பிரியா சுரேந்திரகுமார்

# இளையமகள் மனத்துயர்

அப்பாவென்று அழைத்தாலே அமிர்தமாயினிக்கும்
எங்கள் இதய தாமரையில் வீற்றிருக்கும்
அன்போடு எங்களை வளர்த்து நாளும்
இப்பாரில் உயர்த்திட்ட உயருள்ளத் தெய்வம்
இப்போயில்லை யென்பதை ஏற்கமுடியவில்லையப்பா!

ஒப்பில்லா அகல் விளக்கே உள்ளத்தாலிமயமாகி
எப்போதும் நற்பேரோடு நாங்கள் வாழ வேண்டி
எப்பாடு பட்டெல்லாம் எங்களை வளர்தீர்கள்
நல்வாழ்வு நாங்கள் வாழவழி அமைத்துதந்து
சொல்லாமல் எப்படிச் சென்றீர்களப்பா!

வீட்டிலுள்ள உங்கள் தேட்டப் பொருட்கள்
உங்கள் நினைவைமீட்டு கதைகதையா சொல்லுதப்பா
பார்க்கு மிடங்களெல்லா முங்கள் பண்பான தோற்றம்
வேர்த்து விருவிருக்க மனதை வாட்டி வதைக்குதப்பா
மண்ணுற்ற வாழ்வைவிட்டு மறைந்ததேனோவப்பா!

உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி நாளும்
ஆண்டவன் திருத்தாள்களை வேண்டி
என்றும் உங்கள் நினைவோடு வாழ்ந்து
நல்லாசி எங்களுக்கு நீங்கள் தந்து
நாளும் காத்திருக்க வேண்டுமப்பா!

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அன்புள்ள இளைய மகள்
திருமதி. சத்தியப்பிரியா ரூபாகரன்



2005 இல் தனது மூத்தமகளின் திருமணத்தின் போது



2017இல் தனது இளையமகளின் திருமணத்தின் போது

# மாண்புறு நினைவுகளிடையே மாமாவும் நானும்......

பருவங்கள் மாறுவதும் ; பகலிரவு தோன்றுவதும் ; உள்ளத்தால் ஒன்றுபட்ட உருவங்கள் இணைவதுவும் விதி எழுதி வைத்தபடி மேதினியில் நடக்குமென்பதற்கமைய, இரண்டாயிரத்து ஐந்தாம் வருடம் ஒரு புலரிக்காலம் பொழுதில், என் அதிபர் ரகுபதி ஐயாவுடன் மிடுக்கான தோற்றத்தில் என் வீட்டு முற்றத்து படலையைத் தாண்டி புன்னகை பூத்த முகத்துடன் முதன்முதலில் என் இல்லற வாழ்வில் சங்கமிக்கவிருக்கும் சபாரெத்தினப் பெருந்தகையை என் தந்தையும் தாயும் தங்கையுமாக வருகவென வரவேற்றோம்! வாஞ்சையுடன் வந்தமர்ந்தார்.

தெளிவுறவே சில வார்த்தைகளை உள்ளதும் உரியதுமாய், ஏற்றமிறக்கமின்றி, நல்வழி காட்டிடவே நயந்து பேசினார். நாமதனை நன்மையெனக் கொண்டோம். நல்ல நாள் பார்த்து மாமாங்கேஸ்வரத்தில் மாங்கல்யதாரணம் மனமுறவே நடாத்தியே மணவாழ்வு கண்டார். நாட்கள் நகர்கின்றன என்னை முதன்முதலில் சந்தைக்கு அழைத்துச் சென்ற சபா ரெத்தினச் சான்றோரின் சால்பை நினைக்கும் போது என் நெஞ்சமெல்லாம் நிறைகிறதே! கொஞ்சு தமிழ் வார்த்தைகளை குறைவின்றிப் பேசிடுமவர் பெயருக்கு ஏற்றாற் போல பெறுமதியான மனிதனவர். மூன்றுமொழி தெரிந்த முத்தான இரத்தினமவர். வீண்பேச்சை அவரிடத்தில் நான் விளையாட்டிற்கேனும் கண்டதில்லை. தான் பேச நினைத்தவற்றை தக்கபடி நல்லறிவாய் சிற்சில வார்த்தைகளால் சிந்தைக்கு விருந்தாகத் தந்திடுவார். நித்தம் அவருடனான என் சந்திப்புக்கள் எனக்குள் நிறையவே சிந்திப்புக்களை சிறப்பாகத் தூண்டியதென்றால் மிகையில்லை.

தமிழிலக்கியவுலகில் நல்லபடியாக கருத்துக்களைக் கூறி, ஆரோக்கியமானதொரு இலக்கியச் சூழலை தந்த மகான். காத்திரமான

கருத்துக்களால் என்னை கவர்ந்திழுத்தார். தந்தை - மகன் என்ற உன்னதமான உறவினால் கட்டுண்ட மானிடராய் காலமெல்லாம் களிப்புறவே வாழ்ந்து வந்தோம். தான் கொண்ட கருமத்தை முடித்தற் பொருட்டு பசிநோக்கார் ; கண் துஞ்சார் ; கருமமே கண்ணாயிருப்பார். இத் தகு தியாகத்தின் பேறாகவே மாமா தனிப்பட்ட தன் வாழ்விலும் சரி, இலக்கியவுலகிலும் சரி பிரகாசிக்க முடிந்ததெனலாம்.

இரண்டாயிரத்து எட்டாம் வருடம் நான்காம் மாதம் ஆறாந்திகதி அன்றைய தினம். மாமா மண்ணுலகில் மலர்ந்த அறுபத்திரெண்டாவது அகவை தினம். அத்தினத்திலே அவருக்கான பேரன் பிறந்தான். அவனுக்கு 'சிவசன்' என்ற நாமம் இட்டு வைத்து இனிமை கண்டார். அவன் வளம் பெற வேண்டி அவர் பட்டபாடுகள் வார்த்தைகளுக்கு எட்டாதவை. அவரது ஆசி அவனுக்கு அப்ஸபோதுமுண்டு ; இப்போதுமுண்டு ; எப்போதுமுண்டு.

உயர் கல்வி கற்க என்னை உயிர்ப்புடனே உரமூட்டிய அந்த உத்தமரை உயரிய அரியணையில் எப்போதும் ஏற்றிவைப்பேன். உயர்கல்வி உவந்த என் ஆய்வின் தேடலாய் "ஆக்க இலக்கில் படைப்பாளி ஆரையம்பதி சபாரெத்தினத்தின் ஆக்கங்கள் ஓர் ஆய்வு" பல்கலைக்கழக மட்ட ஆய்வாய் என்னை அகலப்படுத்தியது ; ஆழப்படுத்தியது. அத்தனைக்கும் அறிஞர் சபாரெத்தினத்திற்கு என் கோடான கோடி நன்றி.

இலைமறைகாயாய் எனக்குள் இருக்கும் ஆற்றலை இனங்கண்டு, களம் தந்த பெருமை என் மாமாவையே சாரும். "குறித்த இலக்குக் கருதி எழுதுங்கள்" என்றுரைப்பார் என்னிடத்தில். வளம் காட்டி களம் தந்த வள்ளலது வாண்மை பற்றி வாயாற எடுத்தியம்பவே நான் ஈழத்தின் தேசிய நாளிதழாம் வீரகேசரி வாரவெளியீட்டை கச்சிதமாய் பயன்படுத்தி " மட்டக்களப்பு ஈன்றெடுத்த மற்றுமொரு படைப்பாளி ஆரையம்பதி சபாரெத்தினம் ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் எழுதிய ஆய்வுசார்

படைப்பினை அப் பத்திரிக்கை அகிலம் வரை சுமந்து மணம் பரப்பியது கண்டு நான் மனம் நிறைந்தேன். மகத்தான பணி செய்தேன். மாமா "எனக்குள் இத்தனை இருக்கிறதா.....!" என்று தற்பெருமை கொள்ளாது அவையடக்கம் அப்போது பேசியதை, இப்போது நினைத்தாலும் இனிக்கிறதே!

தபாலட்டை வாங்கித் தந்து தக்கபடி கவிதை எழுதுங்கள் என்பார். என் பிரசவிப்புக்கள் கண்டு எப்போதும் மெச்சிடுவார். பத்திரிகையில் என்னை பாங்குடனே எழுத வைத்த பார் போற்ற நிகர்த்தவரை நான் போற்றி வணங்குகின்றேன்.

கீதா உபதேசப்படி வாழ்வினை வளம்படுத்திய வள்ளலது உள்ளங்கண்டு நெஞ்சில் நிறைந்த நினைவுகள் எத்தனையோ! என் தாய்க்கும் தந்தைக்கும் தக்க மரியாதை தந்து தகுந்த வழி காட்டி நின்ற தரணி போற்றும் மாமனிதன். என் தங்கையின் பதிவுத் திருமணத்தில் பக்க துணையாளனாய் பார் போற்றும் உத்தமரை பதிவு செய்த பெருமை என் குடும்பம் கொடுத்த கௌரவமே! அன்பு நெறியாளன் அவரிலும் எத்தனையோ அகவையில் அடியேன் இளையவனாகிலும் எனக்கான மரியாதை, கௌரவம் என்றுமே அவரிடத்தில் குறைந்ததில்லை. ஆடம்பர வாழ்வினை விடுத்து, அடக்கமாக வாழ்ந்திடவே அதிக விருப்புண்டு அவருக்கு. சான்றோனாய் விளங்கும் அப்பெருந்தகை மேற்கொண்ட விருப்பால் என் அறிவுக்கும் அனுபவத்திற்கும் எட்டிய வரையில் சான்றோர்கள் சிலரிடத்தே இலக்கியச் சந்திப்புக்களை ஏற்படுத்த முனைந்து, வெற்றியும் கண்டதில் என் நெஞ்சம் நிறைகிறது; அது என் கடைமையுமானதன்றோ.

அற்புதமான படைப்பிலக்கியங்களை தமிழுலகிற்களித்த மாமாவின் பெருமுயற்சிகளில் நூலுருவாக்கப்பணி தொடங்கி வெளியீட்டு விழா வரையில் அம்மான், அளித்த பணிகளை அளப்பரியதென

சிரமேற்கொண்டு செய்த தொண்டை நினைத்துப் பார்க்கையில், அகிலம் போற்றும் படைப்பாளிக்கு நான் சிறு துரும்பாய் பணி செய்ததை பாக்கியமாகக் கருதுகின்றேன். மாமாவின் படைப்புக்களுள் குறிப்பிடத்தக்க ஏற்றமிறக்கம் (சிறுகதை), நல்வழி (சிறுவர் இலக்கியம்), ஆரையம்பதி மண் (வரலாற்று ஆய்வு) முதலாக நூல்களின் பின் அட்டையில் இடம் பிடிக்கத்தக்க குறிப்புரைகளை என்னையே எழுதும் படியாக அந்த அரிய எழுத்தாக்கச் சந்தர்ப்பத்தினை எனக்களித்த அந்தப் பெருந்தகையின் பெருமனதை நினைத்துப் பார்க்கிறேன். என் கண்கள் குளமாகின்றன.

நல்தொரு ஆசான், உளவளத்துணையாளன், அறிஞர், மதியுரைஞர், தக்கவழிகாட்டி என்றவாறெல்லாம் என் வாழ்வில் தடம்பதித்து இடம்பிடித்த உத்தமரது இழப்பு என்னை உலுக்கிப் பார்க்கிறது. வீதி விபத்தொன்றில் நான் விம்மித் தவித்த வேளை விரைவாக வந்தோடி என்னை விபத்திலிருந்து காத்த மகான், வித்தகவேந்தரவர். எம் வாழ்வு வளம் பெற தன் வாழ்வு தந்த தற்கொடையாளன்.

அறிவார்ந்த ஏராளமான நினைவுப் பதிவுகளை அவ்வப்போது எனக்குள்ளே தந்திருந்தார். அவற்றை எடுத்தியம்ப தாள்கள் போதாது, தக்கபடி அவற்றைக் கொண்டால், தகுந்த வாழ்வு எமக்குண்டாம் என்பதே என் கருத்து.

இரண்டாயிரத்து பத்தாம் வருடமென நினைக்கிறேன் நேர்படப்பேசும் நேர்மையாளனை நேர்காணல் வேண்டி அவரது வடிகாலிடப்பட்ட அனுபவப் பகிர்வுகளை அனைவரும் அறியும் பொருட்டாய், இலங்கை வானொலிச் சேவையின் மூலமாய் அரியதொரு செவ்வியை ஏற்படுத்த முனைந்து அந்த அதிமதுரக்குரல் அகிலமெலாம் பரவவழி செய்து முடித்த பெருமை எனக்குண்டென்பதை இறுவட்டாய் என்னிடத்தில் இருக்கிறே அந்தக்குரல்; இனிக்கிறதே அந்தக்குரல் இவற்றையெல்லாம் நினைக்கும் போது எம்மிடத்தில்

அவரில்லையென்றகுறை இதயத்தை பிளிகிறதே.

பிருந்தாவின் திருமணத்தை பிரயத்தனம் செய்து, முடித்த மாமா. ஏவிளம்பி வருடத்தின் சித்திரை மாதத்தில் உடம்புக்கு சரியில்லை என்றார். உறவினர்கள் ஒன்று கூடி கடமையதைக் கண்ணியமாய்ச் செய்திடவென்றே வைத்தியத்தின் உச்சத்திற்கே சென்றும் வளம் பெற முடியவில்லை ; சுகம் பெற முடியவில்லை. மரணத்தைக் கண்டு மாமா மனங்கலங்கியதில்லை. “வாழையடி வாழையாக வாழ்ந்திடுவீர்” என்றுரைத்தார்.

அன்றொருநாள் வெள்ளிக்கிழமை ஆனி உத்தரத்தில் அனைவரும் கூடி நிற்க மீளாத்துயில் கொள்ள வேண்டி, அகிலமதை விடுத்து ஆண்டவன் அடி சேர்ந்த மாயம் தான் என்னவோ! மனதையெல்லாம் மாய்க்கிறதே! நொந்தென்ன கண்டோம் யாம் மாண்டோர் வருவாரோ மானிலத்தே!

வார்த்தைக்கு சுவை தந்த வரகவியே! எழுத முடியவில்லை என்னால், கண்ணீரின் கனம் தாங்காமல் என் இருதயம் கனக்கிறதே! எத்தனை இலக்கியம் எழுதிய விரல்; எத்தனை கவிதைகள் முழங்கிய குரல்; எத்தனை கருத்தை நினைத்த மனம். என் தாய்க் கவிஞனே! உன்னை இனி தரிசிப்பதெப்படி? உங்கள் எழுத்து ஒரு கால் நூற்றாண்டுக் கலாசாரத்தில் கலந்திருக்கிறது.

கடைசியில் மூன்றாந் திகதி எங்கள் இரத்தினத்தின் பொன்னுடல் தாங்கிய பேழையை தகனம் செய்து விட்டோம். அந்த நெருப்புக்கு எத்தனை வருடத்து தாகமோ ஓர் அமுதசுரபியை குடித்து விட்டதே! அந்தச் சுடுகாட்டுத்தீ... மாமாவின் உடலைச்சுட்டது, பின் எங்களது உயிரைச் சுடுகிறதே! ஒரு வெறுமை எங்களைச் சுற்றிக் கொண்டது.

மாமாவின் பொன்னுடல் எரிந்து சாம்பலை சூரியன் சாட்சியாய் சப்த நதிகளில் சேர்த்திட்டோம் மோட்ச உலகடைந்து மாமா மீட்சி பெற்று வாழ்க வென்று

" எண்ணிய முடித்தல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

என்கின்ற பாரதியின் வரிகளுக்கு வாழ்க்கை வடிவம் தந்த மனிதனை 'உள்ளக் கமலமடி உத்தனார் வேண்டுவது" என்கின்ற வித்தக வேந்தர் விபுலானந்தரின் வாழ்வியல் தடங்களில் எப்போதும் இடம்பிடித்த புனிதனை மரணம் காவு கொண்டுள்ளது. மாமா மோட்சவுலகில் நீங்கள் நீங்கா நிலை பெற்று வாழ பரமனிடத்தில் பணிகின்றேன்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

என்றும்,
மாமாவின் நிழலில்,
மருமகன். திரு. சி. சுரேந்திரகுமார்.

# மருமகன் மனத்தவிப்பு

மாமா என்று நானுங்களை
மனதிலே கொள்ளவில்லை - எந்தன்
மேலான தந்தையென்றே
மெய்யாக எண்ணி வாழ்ந்தேன்.

மருமகனான போது மென்னை
மகனாகவே மனத்தாலேற்று - என்றும்
மாபெரும் மதிப்போடணைத்து
மறந்து மண்ணைவிட்டு மறைந்தீர்களே

அன்பின் இருப்பிடம் நீங்கள்
அறிவின் பிறப்பிடம் - என்றும்
தன்னலம் கருதா தந்தையின் கருவூலம்
எங்களை மறந்தேகின தேன்

பிறப்புண்டேல் இறப்புண்டு நியதி
சிறப்போடு வாழ்ந்த புனிதர் - நீங்கள்
மறைந்தும் மறையாத மாமனிதர்
மாமா மறக்கா தெங்கள் மனம் வாழும் வரை
உங்கள் ஆத்மா சாந்தி வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !


இளையமருமகன்
திரு. சி. ரூபாகரன்

# பேரன் சிவசன்

அப்பா என்றே உங்களை நானழைப்பேன்
எப்போதும் உங்களோடு விளையாடியிருப்பேன்
என் குறை போக்க எங்கெல்லாம் அழைத்துச் சென்றீர்
இன்றென்னைத் தனியே விட்டெடங்கு சென்றீர்!

எப்பொருட்கள் எனக்குப் பிடிக்கும் என்று
அப்பொருட்கள் எல்லாமே வாங்கித் தந்து
அன்போடவைகளைப் பெறுவதை ரசித்து
இப்போ எங்கு சென்றீரெனை விடுத்து

எப்பிறவி இப்புவியில் எடுத்தாலும் நான்
உங்களுக்கே பேரனாகப் பிறக்க வேண்டி
தப்பாமல் சாமியிடம் கேட்க வென்று
இப்போதே ஏகினீரோ எனைப்பிரிந்து!



மூத்தமகளின் மகன் சிவசனுடன்



இலங்கைக்கான லெபனானிலுள்ள
அன்னாரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில்

# சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரர் கணபதிப்பிள்ளை சபாரெத்தினம் அவர்களின் வாழ்க்கைச் சக்கரத்தின் நினைவுகளோடு....

சென்ற 30.06.2017 வெள்ளிக்கிழமை ஆனி உத்தர தினத்தன்று சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரர் கணபதிப்பிள்ளை சபாரெத்தினம் அவர்கள் ஆறுமுகப் பெருமானின் ஆலயம், ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம், சாதுக்கள் வாழ்ந்து சமாதியடைந்த சமாதடிப்பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ வீரம்மா காளி அம்மன் ஆலயம், (எங்கள் குலதெய்வம்) ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் துறவிகளின் ஆசி பெற்ற கல்விக் கூடம் இவைகள் அனைத்தும் அமைந்த திருமிகு அழகிய அமைதிச் சைவ சூழலில் அமைந்த ஆரையம்பதி, 3ம் குறிச்சியில் கீழ்வரும் குடும்ப உறவுகளமைப்பில்

தந்தை - நாகப்பர் கணபதிப்பிள்ளை ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் தாய் - கணபதிப்பிள்ளை, தங்கமணியம்மாள், மூத்தசகோதரன் - கணபதிப்பிள்ளை விஜயரெத்தினம் (அரச ஓய்வூதியர்), சகோதரி - திருமதி ஞானலோசனி சுப்பிரமணியம் (அரச ஓய்வூதியர்), சகோதரர் - கணபதிப்பிள்ளை சிவநேசராசா (அரச ஓய்வூதியர்), சகோதரி - திருமதி. பவானி தயாபரன் (அரச ஓய்வூதியர்), சகோதரர் - கணபதிப்பிள்ளை ஞானரெத்தினம் (M.Sc.phD. கனடா), கணபதிப்பிள்ளை தங்கமணியம்மாள் தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வராக 1946 ம் ஆண்டு பிறந்தார், ஆரையம்பதியிலேயே வாழ்ந்தார்.

இவர் எமது குடும்பத் சகோதர, சகோதரிகளின் பட்டியலில் இரண்டாம் இடத்தை அலங்கரித்தார். இவர் எமது குடும்பத்தில் தனிமையான அடக்கமான, ஆடம்பரமற்ற நீதியான மனப்பாங்கைக் கொண்டவர். (எமது தந்தையாரும் அன்னாரின் குணநலன்களைக் கொண்டவர்) தந்தையார் பிறகு ஆசிரியராகவும், கலைஞராகவும்

விளங்கியவர், இவரை 'அர்ச்சுனன் கணபதி' என்றால் தான் அனேகம் பேருக்கு விளங்கும் இதனால் இருவருக்குமிடையில் நெருக்கம் அதிகம். எமது குடும்பத்திலேற்படும் நன்மை, தீமைகளின் போது இவரது பங்களிப்பு முதன்மையானது. அவரால் எடுக்கப்படும் முடிவானது தட்டிக்கழிக்க முடியாதவையாகவிருக்கும் அதனால், அன்னாரது முடிவுகளே நிறைவேற்றப்பட்டுவருவது வழக்கம்.

இவர் ஆரம்பக் கல்வியை மட்/ஆரையம்பதி இ.கி.மி.த.க. வித்தியாலயத்தில் ஆரம்பித்து மட்/கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தில் தொடர் கல்வியை மேற்கொண்டார். அப்போதய பாடநெறிகள் யாவும் ஆங்கில மொழியிலேயே அமைந்திருந்தது (English Medium) இவருக்கு ஆங்கில மொழி மீது ஆர்வம் அதிகமிருந்ததால், சி.பா.த.ப. பரீட்சையில் (S.S.C) சகல பாடங்களிலும் திறமைச் சித்திகள் பெற்று பாடசாலைக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்தார். இவர் உயர் கல்வியில் (H.S.C) நாட்டங் கொள்ள சில இடையூறுகள் காணப்பட்டது. இதனால் உயர் கல்வியை தவிர்க்க வேண்டியேற்பட்டது. காரணம், எமது தகப்பனார். ஆசிரியராக "கரடியனாறு" பாடசாலையொன்றில் பணிபுரிந்து வரும்வேளை வயல், மாடு, ஆடுகள், போன்றவற்றில் நாட்டம் கொண்டு, ஒவ்வொரு விவசாயச் செய்கையிலும் பாரிய நஷ்டம் ஏற்பட்டதால், உள்ளதுரிய எல்லாவற்றையும் விற்று கடனைத் தீர்த்து ரூபா 200 உடன் மட்டுமே ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று, இதனால் அவரது மாதச்சம்பள வருமானமானது எமது கல்வி மற்றும் குடும்பச் செலவுகள் மேலோங்கிய நிலையில் அன்னார் மிகவும் கவலையடைந்து, உயர்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து, அரச வர்த்தமானி மூலம் தாதிய வேலை / பொது எழுதுநர் சேவை பதவிகளுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, இரண்டு பதவிக்கும் நியமனம் கிடைத்தது. அவர் பொது எழுதுநர் சேவையை தெரிவு செய்து அப்பணியிலீடுபட்டார். முதல் நியமனம் அவ்ருக்கு கல்வி அமைச்சின் கீழ் மட்/கல்வித் திணைக்களத்தில் இணைந்தார். சில வருடங்கள் சென்ற பின் அன்னாரது நண்பர்கள்

குறிப்பாக தற்போது சட்டத்தரணியாக பணிபுரியும் "ஸ்ரனிஸ்லொஸ்" அவர்கள் உட்பட்ட நண்பர்கள் இவரது திருமண வாழ்க்கையின் அவசியத்தை எடுத்துக் கூறிய வகையில், தாங்களும் இவ்விடயத்தில் அக்கறை கொண்டதன் பேரில் ஆரையம்பதியை (1ம் குறிச்சி) வசிப்பிடமாக கொண்ட (முன்னாள் தபால் அதிபர் குடும்பம்) சீனித்தம்பி, இராசம்மா, தம்பதிகளின் மூன்றாவது புதல்வியான சீனித்தம்பி சத்தியபாமாவை, (கல்வித் தகமை கொண்டவர்) இல்லறத்தில் பங்காக்கி சபாரெத்தினம் சண்முகப்பிரியா, சபாரெத்தினம் சத்தியப்பிரியா ஆகிய இரு குழந்தைகளுக்கும் தந்தையானார்.

சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு தூதரகங்களுக்கான அதிகாரிகள் பதவிக்கான போட்டிப் பரீட்சையிலும் கலந்து தெரிவாகி, (இரண்டு தமிழர்கள் மட்டும்) நியமனத்தை எதிர்ப்பார்த்தக் கொண்டிருக்கையில், அன்னாரின் சகோதரி திருமதி. ஞானலோசனி, சுப்பிரமணியம் அவர்களின் கணவர் திடீரென இருதயடைப்பால் காலமானதால், இவரது நிலைப்பாட்டில் சிறிது தளர்வு காணப்பட்டது. காரணம், சகோதரிக்கு மூன்று பிள்ளைகள் மூத்த பிள்ளை - ஆண், மற்றைய இருவரும் பெண் பிள்ளைகள். இந்த பிள்ளைகளின் எதிர்காலத்தில் கருத்திற்கொண்ட ஆண் பிள்ளையான சுப்பிரணியம் நேசசிறி அவர்களையும் தனது வெளிநாட்டு பயணத்தில் இணைப்பதற்கு அரும்பாடுபட்டு, இவரது நிலைமையை உணர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவரையும் இணைத்துச் செல்வதற்கான அனுமதி வழங்கி, 1991ல் ரஷ்ய தூதரகத்தில் தூதரக அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார். அன்று தன்னுடன் இணைத்துக் கொண்டு செல்லப்பட்ட மருமகனை ஒரு ஆங்கில கல்லூரியில் உரிய தராதரம் பெற்ற நிலையில் லண்டன் (UK) தூதுவராயத்திலும் ஏற்பட்ட தொடர்பின் பலனாக அவர் ஆறு மாதக்கால கணினி பயிற்சி லண்டன் அரசின் பாதுகாப்பு அமைச்சில் (UNIVERSITY) பயிற்சியாளராக நியமித்து பயிற்சியின் பின் அங்கேயே பணிபுரிந்து வருவதுடன் சகல வசதிகளுடன் வாழ்ந்துவருகின்றார். இவர் தற்பொழுது இரண்டு

குழந்தைகளுக்கு தந்தையாவார்.

இப்படியான இரு செயற்பாட்டை மேற்கொண்ட அன்னாரது அறிவுத்திறன் பாராட்டப்படவேண்டியதே. அதனால், தாய் மாமனான அன்னாரின் பூதவுடலுக்காவது, அஞ்சலியை செலுத்தி, கிரியைகளையும் நடாத்தவேண்டுமென எண்ணங்கொண்டு இப்பணிகளிலீடுப்பட்டார். அன்னார் தூதுவராலயத்தில் இலங்கை மக்களுக்கான சகல விடயங்களுக்கும் இவரை பொறுப்பாக இருந்ததால், பல தமிழ் மற்றும் சகோதர இனத்தவர்களுக்கும் பல உதவிகள் ஒத்தாசை புரிந்து பாதிக்கப்பட்டவர்களின் நன்மதிப்பை பெற்றார்.

"உயிர்காத்த உத்தமனே வாழ்க" என வாழ்த்தியதையும் நாம் அறிவோம். மேலும் இவரது ஐந்து வருட சேவை முடிவுறுத்தப்பட்டதன் பின் லெபனான் நாட்டுக்கான அதிகாரியாக மேலும் ஐந்து வருட காலம் பணியாற்றி நாடு திரும்பினார். அதன் பின் மீண்டும் இலங்கை அரச சேவையில் இணைந்து மட்/தேர்தல் அலுவலகம் மற்றும் மட்/கல்வியியல் கல்லூரி பதிவாளராகவும் பணியாற்றி, வரும் வேளை இவரது இளைய மகளின் திருமணம் பற்றி கவலை ஏற்பட்டது. அப்போது நான்காம் கட்டையில் ஒரு காணியை கொள்வனவு செய்து மூன்றாக பிரித்து இரண்டு புதல்விகளுக்கும் தலா ஒரு துண்டும் தனது மனைவிக்கு மறு துண்டு காணியையும் ஒப்படைத்தார். அத்துடன் அன்னாரின் சிரேஷ்ட புத்திரி செல்வி. சண்முகப்பிரியா சபாரெத்தினம் அவர்களின் (கல்வி தகைமை இருந்தும் அரச பணியை விரும்பாதவர்) திருமண விடயத்தில் ஈடுப்பட்டதன் பயனாக அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் கொண்ட துடிப்பானவரனாக மட்டக்களப்பை வசிப்பிடமாக கொண்ட திரு. சிவலிங்கம் சுரேந்திரகுமார், எம்.ஏ (Dip.in.Edu) பட்டதாரியை சகல சீர்வரிசைகளுடன் தனது மருமகனாககிக் கொண்டு ஆண் குழந்தைக்கும் பாட்டனாருமானார். இரண்டொரு வருடங்களின் பின்னர் நாலாம் கட்டையிலுள்ள தனது காணித்துண்டில் ஒரு வதிவிடத்தை அமைத்து

அவரும் மனைவியும் மற்றும் இளையமகளும் வாழ்ந்து வந்தனர்.

அன்னாரின் கலை ஆர்வம் மேலோங்கியிருந்த நிலையில் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் நாடகங்களை ஆக்கங்களாக வெளிக்கொணர அரும்பாடுபட்டவர். இவரது இந் நடவடிக்கைகளுக்கு பேருதவியாக தனது மருமகன் திரு. சி. சுரேந்திரகுமார் அவர்களை பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது ஆக்கங்கள் யாவும் பார்வையிட்டுள்ளோம். அதற்கான கருத்துச் சொல்லும் அறிவு எம்மிடமில்லை. இவரது ஆக்கங்களில் "நல்வழி" சிறுவர் இலக்கிய கவிதை நூலானது இலங்கை கல்வி அமைச்சினால் அங்கீகரித்து பாடவிதானத்துக்குட்படுத்தப்பட்டது சிறப்பம்சமாகும். அதுபோன்று இவரது சேவை நலன்களைப் பட்டியலிட்டுச் சொல்லமுடியும்.

இக்காலகட்டத்தில் இவரது இளைய புதல்வியின் திருமணம் தொடர்பில் இறையருளால் மண்டூர் கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு.சிறி சிவானந்தரா ரூபாகரன் என்ற வரனைக் கண்டுபிடித்தார். இவரும் ஆரையம்பதி கருவைச் சேர்ந்தவர். இவர் மண்முனைப் பற்று பிரதேச செயலகத்தில் கணக்காளராக பணிபுரிந்து வருவதையும் அறிந்து பேச்சு வார்த்தை மேற்கொண்டதன் பயனாக, உரிய சீர்வரிசையுடன் தனது இளைய மகளின் திருமணம் இடம்பெற்றது. குறித்த வரனும், அன்னாரின் அன்புக்குரியவர் ஒரு அடக்கமான பண்பு நிறைந்தவர் என்பதை அவரது நடிவடிக்கைகளில் அறியக்கூடியதாக இருந்நது.

குறித்த திருமணம், நிறைவேறிய இருவார காலத்தின் பின்பே இவர் கால தேவனின் கட்டுப்பாட்டுக்குள் கட்டுண்டுள்ளதை யாவரும் அறிந்து உச்ச வைத்திய சேவை மேற்கொண்டும், மூன்று மாத காலத்துள் மண்ணிலிருந்து விண்ணுக்கான பயணத்தை 30.06.2017 அன்று காலதேவனே ஏற்படுத்திக் கொடுத்து இறைவனடி கொண்டு சென்றதை நாம் அறிவோம்.

நான் அன்னாரின் இளைய சகோதரன் என்ற வகையில் அவரது வாழ்க்கைச் சக்கரம் தொடர்பில் தெரிந்தவன், புரிந்தவன் என்பதால், மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் ஒழிப்பு மறைப்பின்றி உங்கள் முன் சமர்ப்பித்து எனது கண்ணீர் அஞ்சலியை அன்னாருக்குச் செலுத்துகின்றேன்.

எது எப்படியோ இறைவனின் தீர்ப்புப்படியே சகலதும் நடக்கும் இதனை எவரும் தடுத்து நிறுத்தமுடியாது "எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன். என் பெருமான் மெய்யே உன் பொன்னடிகள்"

மறுபிறப்பிலிருந்து விடுபட இறைவனைப் பிரார்த்திப்போமாக.

திரு. க. சிவநேசராசா,
இளைய சகோதரர்
(சகோதரர்/ சகோதரிகளின் சார்பில்)

# அன்பின் சிகரமே அறிவுமிக்க அண்ணரே!

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணம் வகுத்தாய்
அனைவரும் வாழ நல்லது செய்தாய்
பலரது வாழ்வில் ஒளியேற்றி வைத்தாய்
பார்போற்ற புகழ் சேர்த்து வாழ்ந்த உத்தமரே அண்ணாவே!

காலமெல்லாம் கண்ணிமை போல்
என்குடும்பத்தை சிறப்புடன் காத்து
பண்பான அறிவுரைகள் ஆயிரம் ஊட்டி
அன்புடன் வாழவைத்த என்னருமை அண்ணாவே!

எம்மை அன்போடு அரவணைத்தும் ஆறுதல் கூறியும்
எம்முடன் கூடி பாடல் பகிடி கதைத்தும் வாழ்ந்திட்ட
இனிய நினைவுகளை எப்படி என் நெஞ்சம் தான் மறக்குமோ
எண்ணிப் பார்க்கவே என்னிதயம் வெடிக்கிறதே அண்ணாவே!

ஆற்றைக் கடக்கும் தெப்பமாய் விளங்கினாய்
அனைவரையும் காக்கும் தெய்வமானாய்
புன்னகையால் அனைவரையும் பூக்கவைத்தாய்
புதுமைகள் பலவும் செய்து பூரிக்க வைத்தாய் அண்ணாவே!


மற்றவர்க்குத் துன்பமென்றால் வலியவந்து உதவிடுவாய்
உதவியென்று கேட்போர்க்கு இயன்றவரை உதவிடுவாய்
ஊருக்கு உழைப்பவனாய் உதவ வந்த பெருமகனே
உங்கள் அன்புத் திருமுகத்தை இனியெப்போது காண்பேன் அண்ணாவே!

சிரித்த முகமும் சிந்தனை ஆற்றலும்
கனிந்த பார்வையும் கள்ளமில்லா உள்ளமும்
இறை பக்திக்கோர் எடுத்துக் காட்டாய் விளங்கி
எம்முடன் வாழ்ந்தீரே என் அருமை அண்ணாவே!

உங்கள் உடலும் உயிரும் என்னை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் அன்பும் அறிவுரையும் எப்போதும் நீங்காது
உங்களது உயிர் என் உள்ளத்திலே
தெய்வச் சுடராய் எந்நேரமும் பிரகாசிக்கும் அண்ணாவே!
உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி

மூத்த சகோதரி ,
**திருமதி. ஞானலோசனி சுப்பிரமணியம்**



1995 இல் இலங்கையின் சுதந்திர தினத்தன்று ரஷ்யாவில் உரையாற்றுகையில்



அமைச்சர் AHM பௌசியை ரஷ்யாவில் உள்ள தனது அலுவலகத்தில் சந்தித்தபோது.

# அண்ணன் காட்டிய வழி தன்னிலே............

"அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது;"
"அறநெறி பிறழ்வின்றி வாழ்வாங்கு வாழ்பவர்களை இவ்வையகம் போற்றும்"
"எப்படியும் வாழலாம் என்பதை மறுத்து இப்படித்தான் வாழ வேண்டும்" போன்ற சான்றோர்களின் வாக்குகளுக்கிணங்க வாழ்ந்து காட்டியவர்தான் நீங்கள். அண்ணன் குடும்பத்தில் தாய்க்கு இரண்டாவது மகனாகப் பிறந்தாலும், குடும்பச்சுமையை இளம்வயதிலேயே தலைமேல் சுமந்து, குடும்பத் தலைமையை ஏற்று, மெழுகுதிரி தன்னை உருக்கி பிறருக்கு ஒளி தருவது போல் எங்களை வாழவைத்த தெய்வம் அண்ணன் நீங்கள்.

எனக்கு நீங்கள் ஒரு சகோதரனாக வெளியுலகிற்குத் தெரிந்தாலும், உண்மையிலேயே நீங்கள் ஒரு தந்தையாக, நல்ல ஆசானாக, நண்பனாக, ஆலோசகனாக, தெய்வமாகத்திகழ்ந்தீர்கள். நான் கல்வி கற்ற காலம் தொடக்கம் ஆசிரியையாகக் கடைமையாற்றி ஓய்வு பெற்ற இன்றைவரை தங்களின் வழிகாட்டலின் கீழ்த் தானே வாழ்ந்து வந்தேன். எனது வாழ்க்கை செழுமையுற எனக்காக உழைத்தீர்களே அண்ணன். எங்களுக்கு பிரச்சினை என்றால் ஆலோசனை கேட்பது உங்களிடம் தானே அண்ணன். ஒரு சிறந்த சட்டத்தரணிபோன்று அப்பிரச்சினையை மிகப்பவ்வியமாக தீர்ப்பதற்கு வழிவகை சொல்வீர்களே அண்ணன் இனி நான் யாரிடம் செல்வேன், என் குறைகளை எங்களில் யாருக்காவது, பிரச்சினை என்றால் ஒரு தொலைபேசி அழைப்புப் போதுமே உங்களை வரவழைக்க ஓடோடி வந்துவிடுவீர்களே! ஒரு தீர்க்கதரிசி போன்று எதிர்காலத்தில் நிகழப்போகின்றவைகளை எதிர்வு கூறுவீர்களே அண்ணன்.

கந்தசஷ்டிப் பூஜை இரண்டாம் நாள் நமது பூஜை என்று உங்களுக்கு தெரியும். முதல்நாளே வந்து பூஜைக்குரிய ஆயத்தங்கள் எல்லாம் சரியா? என என்னிடம் வினவுவீர்களே அண்ணன். அன்று

அதிகாலையிலே பெட்டிபெட்டியாக மாம்பழங்கள், அன்னாசிப் பழங்களுடன் வந்திறங்கி, அத்தனை வேலைகளையும் அண்ணனும் அண்ணியுமாக நின்று செய்து, கச்சிதமாக வேலைகளை முடித்து கோயிலுக்குச் சென்று பூஜையில், சங்கற்பத்திற்கும் நீங்களே இருந்து பூஜையை நேர்த்தியாகவும் ஒழுங்கு முறையாகவும் செய்து முடிப்பீர்களே! இனி, இதெல்லாம் யார் செய்வார்கள். நீங்கள் இல்லாமல் என்ன செய்ய முடியும். உங்கள் இடத்தை நிரப்ப யாரால் முடியும் அண்ணன். என் மனம் ஏங்குதே! அண்ணன். நீங்கள் இல்லாமல் நாங்கள் படும் வேதனை சொல்லியுமாளாது அண்ணன். நீங்கள் எங்கள் குடும்பத்தின் விடிவெள்ளி அண்ணன்.

உங்களுக்கு நோய் தோன்றிய நாளிலிருந்து நான் பசியை மறந்தேன் அண்ணன். நித்திரையின்றி இரவிரவாக எல்லாத் தெய்வங்களின் மந்திரங்களையும் உச்சரித்து, பிரார்த்தனை செய்து எனது அண்ணனின் நோயைக் குணப்படுத்து இறைவா! என்று மன்றாடுவேனே. நேர்த்திக்கடன்கள் பல வைத்தேனே அண்ணன். எனது துக்கத்தை ஒரு போதும் உங்கள் முன்னால் காட்டிக்கொள்ளவேயில்லையே அண்ணன். உங்களுக்கு முன்னால் நான் சந்தோஷமாக இருப்பதுபோல் நடந்தேனே அண்ணன். நான் ஒரு நடைப்பிணமாக இயங்கினேனே அண்ணன். உங்கள் நினைவுகளை கண்ணீரால் அபிஷேகம் செய்தேனே அண்ணன்.

உங்களை எங்கள் காரில் ஏற்றிக் கொண்டு வெளியே செல்லும் போதெல்லாம் நானும் தயாபரனும் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தோம், அண்ணன். உங்கள் நோய் குணமாகியதும், எங்கள் காரில் கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கக் கொண்டு செல்லவேண்டுமென்று நாங்கள் இருவரும் திட்டமிட்டிருந்தோமே அண்ணன். உங்களை கூட்டி கொண்டு எல்லோரும் திருப்பதி சென்று நேர்த்திக்கடன் நிறைவேற்ற வேண்டும், என்று நான் உங்களிடம் கூறினேனே நீங்களும் சந்தோஷப்பட்டீர்களே! அண்ணன். நான் நேர்த்திக் கடன் வைக்காத சாமியோ, கோயிலோ இல்லையே

அண்ணன். என்னுடைய வேண்டுதல் ஒன்றுக்குமே அந்தக் கடவுள் செவிசாய்க்கவில்லையே. இது விதியா! உன் சதியா! இறைவா!

ஒரு நாள் என் வேதனையை என்னால் கட்டுப்படுத்த முடியாத நிலையில் நான் அழுதபோது என்னை உங்கள் அருகில் வந்து அமரச் சொல்லி, “எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும் வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் இடம் ஏது?, எல்லோரும் ஒரு நாள் இந்த மண்ணைவிட்டுப் புறப்பட்டுத்தான் ஆகவேண்டும், இது இயற்கையின் நியதி, நீ அழவேண்டாம் ஏற்றுக் கொள்ளவேண்டும், சாப்பிடாமல் இருக்காமல் உடம்பைக் கவனித்து கொள்” என்று எனக்கு ஆறுதல் கூறினீர்களே அண்ணன்.

இறுதியாக ஒரு கட்டத்தில் எங்கள் இரண்டு குடும்பங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று இரு பகுதியாரிடமும் கேட்டுக்கொண்டீர்களே அண்ணன். உங்கள் மூத்த மகள் பிரியா மீது உங்களுக்கு அலாதிப்பிரியம் அதேபோல், பிரியா மீது எனக்கும் பிரியம் தான் அண்ணன். உங்கள் உருவத்தையும் செயலையும் (உங்கள் நிழலை) பிரியா என்ற நிஜத்தின் மூலம் நான் இனிமேல் பார்க்க ஆசைப்படுகிறேன் அண்ணன். உங்கள் ஆசையை என்றுமே மறக்காமல் நிறைவேற்றுவோம் அண்ணன். இது உறுதி!.

நீங்கள் எங்களுக்காக செய்த தியாகங்களையும் சேவைகளையும் எங்களால் மறக்கமுடியுமா? அண்ணன். அதற்கு இந்தப் பிறவி போதுமா? உங்கள் இடத்தை வேறொருவரால் நிரப்ப முடியுமா? நீங்கள் பெறுமதி மிக்க பொக்கிஷம் அண்ணன். இந்தப் பொக்கிஷத்தை 71 வயதில் தூக்கிக் கொடுக்க எங்களால் முடியவில்லை அண்ணன். இறைவா இது நீதியா? நியாயமா? தர்மம் தானா? உன்செயல் கூறு இறைவா....!


ஏழு பிறவியிலும் உங்கள் தங்கையாகப் பிறக்க வேண்டுமென்று நான் இறைவனிடம் கேட்கவா? அது எனது சுயநலம் அல்லவா? இல்லை, இல்லை, உங்களுக்கு சுயநலமாக இருப்பது பிடிக்காதே! அவ்வாறு நான் ஒரு போதும் கேட்கமாட்டேன். எனது அண்ணனுக்கு இனிமேல் பிறப்பு வேண்டாம். முத்தி - மோட்சம் கொடு இறைவா... " எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான் மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" என்ற மணிவாசகர் பெருமானின் கூற்றுக்கிணங்க மீண்டும் உங்களுக்குப் பிறப்பு வேண்டாம். இறைவனின் திருவடி நிழலில் அமர என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கீதா உபதேசத்தை உணர்ந்து நான் மனச்சாந்தி அடைவதா? அதற்கு பார்த்த சாரதியாம் கண்ணனின் உபதேசத்தைக் கேட்ட காண்டீபனின் மனப்பக்குவம் எனக்கிருக்கின்றதா? என்று என்னையே நான் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.ஏனென்றால் நான் இப்போது சகோதரனை இழந்து ஆறாத்துயரில் கலங்கிப்போய்த் தெளிவில்லாமல் இருக்கிறேனே. இதற்கு காலம் தான் மருந்தாக அமைய வேண்டும்.

அன்புடன்
இளைய சகோதரி
**திருமதி. பவானி தயாபரன்**

# அமரர். சபாரெத்தினத்தின் சாதனைச் சான்றுகளுள் சில











# மாமா நீங்கள் என் தெய்வம் ....

1986.08.22ம் திகதி அன்று காலை என்னுடைய தந்தையார் என்னைப் பாடசாலைக்கு வழி அனுப்பிவைத்து விட்டு, பின்னர் பி.ப 04.00 மணிக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்திற்கு உபஅதிபராக சமுகமளிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் வேளையில், திடீர் மாரடைப்பு காரணமாக அவர் உயிர்பிரிந்தது. அந்தச் சோகச் செய்தியை அறியாதவனாக நான் வீடு வந்து சேரும் போது, பிணமாக எனது தந்தையைக் கண்டேன். அப்போது எனக்கு வயது 15 அந்த வருடம் டிசம்பரில் G.C.E O/L பரீட்சை எடுக்க வேண்டிய மாணவன் நான், என் தந்தையை இந்தக் கோலத்தில் கண்ட எனது மனநிலை எப்படியிருந்திருக்கும் என்பதை இறைவனைத் தவிர, வேறு எவராலும் உணரமுடியாது. அந்தநிலையில் மருமகனான என்னை நீங்கள் மகனாக ஏற்று இன்று வரை உங்கள் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஒரு தந்தைக்குரிய பாசத்தையும், பரிவையும் என்னில் காட்டினீர்கள்.

1990 இற்குப் பின்னர் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக, எனது உயர்தரக்கல்வியை கண்டியில் கற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட வேளையில், நீங்கள் பரீட்சையில் சித்தியடைந்து ரஷ்யா செல்லும் வாய்ப்புக் கிட்டியது. அவ்வேளையில், என்னை தனது மகன் என்று காட்டி என்னையும் அந்நாட்டுக்கு உங்களுடன் கூட்டிச் சென்றீர்கள். எனது மேற்படிப்பைத் தொடர ஆவன செய்தீர்கள். பின்னர் சில மாதங்கள் அங்கிருந்து நான் லண்டனுக்குச் சென்று எனது பட்டப்படிப்பை நிறைவு செய்தேன். (BSC Computer Science) இன்று (U.K.MOD) இல் (IT Manager (Lincoln shire Branch) என்ற இந்தப் பதவியில் இருப்பதற்கு உங்கள் ஆசீர்வாதமும் தான் மாமா காரணம். உங்கள் தன்னலம் கருதாத சேவையும், சகோதர பாசமும், என் அப்பாவின் இடத்தை ஈடுசெய்ய வேண்டுமென்ற ஆழமான அன்பு தான் மாமா காரணம்.

உங்களின் குணம் கோபுரம் போல் உயர்ந்த குணம் மாமா. இது யாருக்கு வரும். உங்களைத் தவிர. இது போன்று என் இரு சகோதரிகளையும் நல்ல நிலைக்கு கொண்டு வந்ததும் நீங்கள் தானே

மாமா. நான் இன்று இந்த நிலைக்கு வந்ததற்கு உங்களைத்தவிர. வேறு யார் காரணமாக இருக்க முடியும் மாமா. என் உயிரை காப்பாற்றிய தெய்வம் மாமா நீங்கள்.

உங்களுக்கு இவ்வளவு விரைவாக நோய் வரும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை மாமா. விஷயம் அறிந்து "நவலோகா" வைத்தியசாலையில் உங்களிடம் தொலைபேசியில் உரையாடினேனே மாமா.

இறுதியாக 2017.06.27 திகதி செவ்வாய்க்கிழமை உங்களிடம் தொலைபேசியில் கதைத்தபோது உங்களால் சரியாகப் பேச முடியாவிட்டாலும் பேசியவரை சகோதரிகள் இருவருடனும் ஒற்றுமையாக இருக்கும் படிச் சொன்னீர்களே.

2017.07.03ம் திகதி லண்டனிலிருந்து புறப்பட்டு உங்களை நேரில் பார்ப்பதற்கு (உயிரோடு) ஓடோடி வரலாம் என பயணத்தை திட்டமிட்டு இருந்தேன் மாமா. என்ன செய்வது என் ஆசை நிறைவேறவில்லையே மாமா. துரதிஷ்டவசமாக உங்கள் இறுதிக்கிரியைகளை நிறைவேற்றவே வரமுடிந்தது. எல்லாம் இறைவன் செயல் "நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை" என்ற பாடல் வரிகள் நினைவுக்கு வர என் கண்கள் குளமாகியது.

" எந்நன்றி கொண்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொண்ற மகற்கு"

மாமா இனிப் போதும் நீங்கள் இப்பிறவியில் பட்ட கஷ்டம். பிறந்தது முதல் மற்றவர்களுக்காகப் பட்ட கஷ்டம் போதும் மாமா. வேண்டாம் மாமா இவ்வுலகில் ஒரு பிறப்பு. இறைவா என் மாமாவுக்கு மோட்சம் வேண்டும். இறைவா மாமாவுக்கு மோட்சம் வேண்டும். வேண்டும்..... இறைவா........ ஓம் சாந்தி......ஓம் சாந்தி...... ஓம் சாந்தி......

மருமகன்
திரு. சுப்பிரமணியம் நேசசிறி

# 'ஆரையம்பதி க. சபாரெத்தினம்' அவர்களது எழுத்துலகத் தடங்கள்.

மட்டக்களப்பு மாவட்ட நவீன இலக்கியத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் ஆரையம்பதி பிரதேசத்திற்கு முதன்மை இடமுள்ளது. இவ்விதத்தில் இப்பிரதேச எழுத்தாளரான அமரர். நவம் தமது சிறுகதைகளூடாக ஈழத்தில் ஆரையம்பதி என்றொரு ஊர் இருப்பதனை ஈழத்தின் பிறபிரதேச எழுத்தாளர்களுக்கு மட்டுமன்றி தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்கே இனங்காட்டியவர். அமரர். ஆரையம்பதி சபாரெத்தினமும் சிறுகதை, பிரதேச வரலாறு, கவிதை, சிறுவர்பாடல், நாடகம், மொழிபெயர்ப்பு என பலதுறையில் ஈடுபாடுக் கொண்டவர். ஒரு சில விதங்களில் முன்னவர் போல் புகழ் படைத்தவர்.

சிறுகதைத் துறையில் ஈடுபட்ட ஆரையம்பதி சபாரெத்தினம் எழுதிய சிறுகதைகளுள் சில ஏற்றமிறக்கம் (2010) என்ற பெயரில் நூலுருப் பெற்றுள்ளன. எழுபதுகளிலே இத்துறையுள் பிரவேசித்த இவரது சிறுகதைகள் ஏனையோரது சிறுகதைகளிலில்லாத சில சிறப்புகள் கொண்டவை. உதாரணமாக, பெரும்பாலான எழுத்தாளர்களின் முக்கிய கவனத்திற்குட்படாத, அரச அலுவலகங்களோடு தொடர்பான விடயங்கள் சில அத்தகையன. தொகுப்பிலுள்ள முதற்சிறுகதையான 'ஏற்றமிறக்கம்' அரச திணைக்கள மேலதிகாரிகள் - அவர்களுக்குக் கீழ்ப்பணிபுரிவோர் பற்றியது. 'நீதியான கோரிக்கை' இலஞ்சம் தொடர்பானது 'நாளை என்பதில்லை' மேசன் குடும்பமொன்றின வறுமைநிலை பற்றியது. மத்தியதர வர்க்கத்தினரின் பொருளாதார ரீதியான போராட்டம் பற்றியது, 'வரவு எட்டணா, செலவு பத்தணா' ஆக, இவ்விதங்களில் இவரது சிறுகதைகள் மட்டக்களப்பு எழுத்தாளர்களுள் தனித்துவமான இயல்புடையவராக இவரை இனங்காட்டுகின்றன.

'ஆரையம்பதி மண்' (உள்ளதும் உரியதும்) (2014) பிரதேச வரலாறு பற்றியது. ஆரையம்பதியின் வரலாறு ஆவணப்படுத்தப்பட வேண்டிய, இன்றைய சமூக, அரசியல் சூழலில் இந்நூல் அதனைத் திறம்படச்செய்துள்ளது. இந்நூலின் சிறப்பிற்கு "ஒருபானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்" என்ற விதத்தில் இரு அத்தியாயங்களை எடுத்துக்காட்டலாம். உதாரணமாக, 'பூர்வீகமும் தோற்றுவாயும்' என்ற அத்தியாயம், இப்பிரதேசத்தின் தொன்மை வரலாற்றை ஆதார பூர்வமாக கி.மு. 200 அளவிற்குக் கொண்டு செல்கின்றது. 'மண் வாசனை மொழி வழக்கு' என்ற அத்தியாயத்தில் ஆரையம்பதி பேச்சு வழக்குகளில் சிலவற்றை உதாரணமாக, கஸ்மாரம், ஆர்த்தாப்பாக் கிழங்கு என்பனவற்றின் அடிப்படை ருஷ்ய மொழியோடு தொடர்புபட்டிருப்பதாக நிறுவுகின்றார். ஆக, இவ்விதங்களில் முறையே சமூக வரலாற்று ஆய்வாளரதும் மொழி வரலாற்று ஆய்வாளரதும் தேடலுக்கு வழிவகுத்திருக்கிறார், ஆரையம்பதி, க. சபாரெத்தினம்.

கோயில் வரலாறு தொடர்பாக, இணையாசிரியராக இவர் அண்மையில் வெளியிட்ட ஆரையம்பதி கண்ணகி வரலாறு என்ற நூல் இப்பிரதேச கண்ணகி வரலாறு தொடர்பாக புதிய சில தகவல்களை தந்துள்ளது. உதாரணமாக, இக்கோயில் சடங்குகளுள் ஒன்றாக இந் நூல் குறிப்பிடும் 'கப்பற்காரர் சடங்கு' என்பது வேறு கண்ணகி கோயில்களுள் நிகழ்வதில்லை. இப் பிரதேசத்தின் குடிமனை அமைப்பு முறையும் ஒப்பீட்டடிப்படையில் வித்தியாசமானதே.

இவரெழுதிய நூல்களுள் காலத்தால் முற்பட்டது, 'மொஸ்கோ அனுபவங்கள்' (2002). புனைகதை சாரா இலக்கிய வகைகளுள் இது ஒன்றாக அமையக்கூடிய வகையில் இந்நூலின் வரவு இத்துறையில் இவரது இம் முயற்சிக்கு உயர் அந்தஸ்து அளித்துள்ளது. சோவியத் ஒன்றியத்தின் தலைநகரான மொஸ்கோவிலே உள்ள தூதுவராலயத்தில் ஏறத்தாழ ஐந்தாண்டுகள் (1991-1995) பணிபுரிந்த காலத்து அனுபவங்களின் பகிர்வே

## அமரர். சபாரெத்தினத்தின் ஆக்க இலக்கியப் படைப்புக்கள்


















இந்நூலாகும். தமிழகத்திலும் சரி ஈழத்திலும் சரி இவ்வாறான வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் அவ்வப்போது தமிழர்கள் பணிபுரிந்திருப்பினும், அவர்களெவரும் தமது அனுபவங்களை நூலுருவில் வெளிப்படுத்தாத சூழ்நிலையில் இந்நூலின் வரவு மிகுந்த பாராட்டிற்குரியது. இவ்விதத்தில் ஆரையம்பதி பிரதேசத்தின் நாமம் தமிழகத்திலும் ஒலிக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலை உருவாக வழிசமைத்தவர் ‘ஆரையம்பதி க. சபாரெத்தினம்’ அவர்களே!

“தக்கார் தகவிலார் என்ப தவரவர்
எச்சத்தால்’ அறியப் படும்”

என்பது திருக்குறள்! இவர் ‘தக்கார்’ என்பது மேற்குறித்தவாறான இவரது இலக்கிய எச்சங்களாலும் அறியப்படும்; இவரது நினைவு என்றென்றும் உறுதிப்படும்!

பேராசிரியர் செ.யோகராசா

# சபாவின் கலைப்படைப்புக்கள் குறித்ததான சில அவதானிப்புக்கள்

## தமிழில் கட்டுரைகள்

"மீசை" கட்டுரை இலக்கியப் பிரவேச முதல் பிரசவிப்பால் மலர்ந்த ஆசை
"பள்ளிக் காதல்" சாளர சஞ்சிகையால் எழுந்ததே அவர் புகழ் ஓசை.
"தமிழ் மாவட்டமும் பல்கலைக்கழக அனுமதியும்" மாணவர் நிலை காட்டிநிற்கும்
தமிழ் மொழி மூலக்கட்டுரைகளனைத்தும் அவர்தரத்தை இட்டுரைக்கும்.
"கந்த சஷ்டி விரதமும் அதன் மகிமையும்" விரதப் பெருமையையூட்டும்
"புத்த பெருமான் போதனைகள்" பௌத்த மதத்திலுள்ள செழுமையைக் காட்டும்.
"எழுது வினைஞர் சேவை" எதிர் கால சந்ததியினரின் சேவைக்குத்தேவை
"அரசாங்க ஊழியமும் பொது எழுதுவினைஞர் சேவை" காக்க வேண்டிய கோவை.
"சிங்கள கோஸ்தியா என்றழைக்கப்படும் ருஸ்யா" அந்நாட்டறியு மூடகம்
"தமிழ்மொழி வளர்ச்சிக்கு" தமிழர்களின் தன் மானம் காத்திடு பாடகம்!
"அருள்மழை பொழியும் ஆரையம்பதி ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயம்"
அவவடி பணியும் பக்தரை ஈர்த்துத் தன்வயப்படுத்தும் வாலாயம்.
"கள்ளியம் பிட்டியை எரித்த கண்ணகி" காட்டி நிற்பதவ அற்புதம்
"ருஸ்யாவில் இலங்கையர் எதிர்நோக்கம் பிரச்சினை" காட்டிடும் தற்போதம்.
"கசப்பான உதாரண" விமர்சனக் கட்டுரை காடைய ரினவாத பரிணாமம்
"களுதாவளைப் பிள்ளையார் மகோற்சவம்" அவர்பெருமை கூறு கரிநாதம்.
"மாமாங்கேஸ்வரர் மகோற்சவம்" மட்டுநகருக்கு மகிமைதரு உற்சவம்
"ஆரையம்பதியில் கண்ணகி விழா" காண்பவர்க்கவவளிப்பா பொற்பதம்.

"தமிழ்மொழியை அரியணை ஏற்றுவோம்" தலைநிமிர்ந்து வாழுவோம்
"இந்து மதமும் நாஸ்தீகமும் அடிப்படையில் ஒன்றே" எனவுணர்ந்து மாற்றுவோம்.
"நம்பிக்கருள் பாலித்த் நல்ல குருதேசிகன்" நம் சிவனை யேற்றுவோம்
"தமிழ் கவிதைகள்" தன்னை தரணியுள்ள வரையும் போற்றுவோம்.
"ஒலிச்சீர்திருத்தம் தமிழுக்குத் தேவையில்லை" அதைப்பற்றி நிற்றல் பயனில்லை.
"வெற்றிலை" எல்லா மக்கள் வாழ்விலும் பற்பல வெற்றியளிக்கும் நிலை
(பாடகம் : 1. வல்லமை. பெருமை, தற்போதம் 2. தன்னைத் தான் அறிதல்)

## நாடகங்கள்

"கொடுக்கல் + வாங்கல் = பிணக்கு
நடமுறைச் சமுதாய வழக்கு.
"மூன்று முகங்கள்" காட்டியது நாட்டில்
தோன்றும் அபலங்கள்.
"என்னவாம் நாட்டுப் புதினம்"
எம் மக்களிடை தோன்றும் சலனம்.
"இது நம்மோட விதி" இயலாதோர்
அது விதிமேல் போடும் பழி.
விதியின் விளையாட்டு" வருமுன்
மதியாலதை மாற்றிக் காட்டு.

**நூல்கள்**

"மொஸ்கோ அனுபவங்கள்" தருவது
எமக்கோ பல அறிவுரைகள்.
"இதயத்தாமரை" மகனுள்ளத்
உதய பாச மாமறை.
"ஏற்றம் இறக்கம்" சிறுகதைகள்
சேர்த்துக் கோர்த்த தொகுப் பாகும்.
"நல்வழி" சிறுவர் மேன்மைக்கான
அவ்வழி காட்டு கவிதைகள்
"ஆரையம்பதி மண்" ஊரவருள்ளத்தே
ஆழப்பதித்திட்ட பொன்.
"இந்து மதத்தின் இன்றைய தேவைகள்"
நின்று ஒலிக்கு மிதயத்தின் ஓசைகள்

மூத்த கலைஞர்
**திரு. மூ. அருளம்பலம்**
(ஆரையூர் அருள்)

அமரர். சபாரெத்தினத்தின் ஆக்க இலக்கியப் படைப்புக்கள்

21.11.2010

# மட்டக்களப்பு ஈன்றெடுத்த மற்றுமொரு படைப்பாளி ஆரையம்பதி சபாரெத்தினம்

## - ஒரு பார்வை



# தமிழ் மொழி வளர்ச்சி

ஆரையம்பதி க. சபாரெத்தினம்

# பெயருக்கேற்ப வாழ்ந்த பெருந்தகை!

மட்டுமாநகரை அண்டிய ஆரையம்பதி ஊரானது, பல கல்விமான்கள், அறிஞர்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், தலை சிறந்த நிருவாகிகள், புலவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் என ஈன்றளித்த ஊராகும்.

இவ்வரிசையிலேதான் 06.04.1946 திரு. கணபதிப்பிள்ளை சபாரெத்தினம் ஐயா அவர்கள் பிறந்தார். ஐயா அவர்கள் பிறந்ததும் அவருடைய தந்தையவர்கள் தனது மகன் கல்வி, கேள்வி, ஒழுக்கம், பண்பாடு, நீதி நேர்மையெனும் விழுமியங்களில் சிறந்தவராக பலரால் பாராட்டக்கூடியவராக அறிஞர் பெருமக்களின் அவையில் அமரும் தகுதியுடையவராக வரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இலக்கிலே எதிர்வு கூறுதலாக (தீர்க்கதரிசனம்) சபாரெத்தினம் என்றே பெயர் சூட்டினார் என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது.

அன்னாரின் எண்ணப்படியே தனது மகனான ஐயா அவர்களும், தந்தையின் ஆசையை நிறைவு செய்தவராக வாழ்நாளில் சான்றோர், அறிஞர் பெருமக்கள் மதிக்கக்கூடியவராக மக்கள் மன்றத்திலே ஒரு ஒப்புயர்வற்ற இரத்தினமாக (சபா+ரெத்தினம்)வே வாழ்ந்து காட்டினார் என்றால் அது மிகையல்ல.

ஐயாவின் உறவும் தொடர்பும் எனக்கு இதே ஆரையம்பதி மண்ணைச் சேர்ந்த ஆத்மீகவாதியும், புலவரும் எழுத்தாளரும், அதிபருமான கலாபூசணம் திரு.மு.அருளம்பலம் (ஆரையூர் அருள்) ஐயா அவர்களின் மூலமாகவே உருவானது. இந்த உருவாக்கத்தினைத் தொடர்ந்து ஐயா அவர்கள் எழுதி வெளியான

1. இயத்தாமரை (1990)
2. மொஸ்கோ அனுபவங்கள் (2001)
3. ஏற்றமிறக்கம் (2010)
4. நல்வழி (2010)
5 ஆரையம்பதி மண் - (2012) ஆகிய நூல்கள் படிக்கக்கிடைத்தது.

இந்த நூல்களின் வாயிலாக ஐயா அவர்களின் அறிவாற்றல்களையும் தமிழ்மொழியிலும், ஆங்கில மொழியிலும் அவருக்குள்ள பாண்டித்தியத்தினையும், அம்மொழிகளின் ஊடாக அவர் கையாண்டுள்ள கவிதைகள் சிறுகதைகள், வரலாறு, அனுபவக்கட்டுரை ஆகியென என்னைப் பிரமிக்க வைத்தன. மட்டுமல்லாமவ் ஐயாவின் சிந்தனை, எழுத்து, சொல், செயல் ஆகிய நான்கும் ஒன்றையென்று கூடிக்குறையாமல் சமன்செய்த நிலையிலே இருக்கக்கண்டேன்.

"சுவை ஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகை தெரிவான்கட்டே உலகு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய் மொழிக்கேற்ப இப்படிப்பட்டவர்களின் செயல்களுக்கே இந்த உலகே கட்டுப்படுமென்றால் அற்பனான அளவில் பரிமாணத்தில் அணுவிலும் நூறு பங்கில் ஒன்றான கோணினும் சிறியவனான நான் ஐயாவின் ஈர்ப்பில் இணையாமல் நிற்கமுடியுமா?

நானும் ஐயாவும் நெருங்கிப் பழகினோம் நான் தாழங்குடாவில் இருந்த ஒன்பது வருட காலங்களிலும் மேலும் திருப்பழுகாமம் சென்றதன் பின்னும் எந்த ஒரு இடைவெளியுமில்லாமல் அடிக்கடி செல்வேன். இதனால், எனது தனிப்பட்ட வாழ்க்கை முதல் பொது வாழ்க்கையான, சமூக, இலக்கிய, எழுத்துப்பணியினையும், எனது உணவு உடை, சுவை, விருப்பு, வெறுப்பு போன்ற அனைத்தையும் ஐயா அவர்கள் நான்

சொல்லாமலேயே அறிந்திருந்தார். இருந்தும் என்னை எந்த நிலையிலும் நினைப்பிலும் புறந்தள்ளாமல் தன்னோடு சரிசமனாக வைத்தும் மதித்தும் பழகினார்.

தனது குழந்தைப் பருவம் முதல் பள்ளிக்கூடம் சென்று கற்றுத்தேறியது உத்தியோகம், திருமணம், வெளிநாடுகளான லெபனான், ரஷியா நாடுகள் பற்றிய அனுபவங்கள் நல்லது கெட்டதென அனைத்தையுமே என்னிடம் சொல்லி மகிழ்வார். நிறைவடைவார்.

ரஷிய நாடு செல்ல இருந்த வேளையில் தனது சகோதரியின் மகன் மருமகனை இந்நாட்டிலேயே விட்டுச் சென்றால் யுத்த சூழ்நிலையில் ஏதோ ஒரு வழியில் அவர் பாதிக்கப்பட்டலாம் என் கவலையில் தனது பெற்றமகன் ஒருவர் மீது எடுத்த அக்கறையிலும் மேலான அக்கறைகாட்டி தனது நேர்மையால் அணுகுமுறையால் எதுவிது கெடுபிடியுமின்றி ரஷியநாடு கூட்டிச்சென்ற அவரது உயிருக்கும், எதிர்கால வாழ்விற்கும் பாதிப்பும் இடையூறுமின்றி காப்பாற்றினார். வழிகாட்டினார் இதே நேரம் தனது மருமகனை வைத்து உழைத்து வாழவேண்டு மென்றோ வேறு உள்நோக்கம் கொண்டோ செயற்பட்டாரில்லை.

எனவே, ஐயாவைப் போன்ற ஆத்மீகவாதியை, ஒழுக்க சீலரை நீதி நேர்மையாளரை மனித நேயமுடையவரை நாணயஸ்தரை லெட்சத்திற்கு ஒருவரைத்தான் காணலாம். ஐயா அவர்கள் ஒரு பிள்ளையார் பக்தன் ஆனால், நாம் இன்று சமுதாயத்திலே காணும் பக்தர்களை பார்ப்போமானால், உலகிலே உள்ள அனைத்துக் கல்வி செல்வங்கள் பணம், பதவி, மாடிமனை, நிலபுலன், கார் போன்ற அனைத்தையும் வரமாகக்கேட்டு நிற்கும் பக்தர்களைத் தான் பார்க்கலாம். இதற்கெல்லாம் எதிர்மாறாக ஐயா அவர்கள்

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

என்ற நிலையிலும்

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல",

என்றதன் உண்மையுனர்த்தும் வழிபட்டும் வந்தவர்தான் ஐயா அவர் பொருளீட்ட எண்ணியிருந்தால் ரஷிய நாட்டில் இருந்தகாலப்பகுதியில் தேடாமலே வந்த செல்வங்களாகப் பலகோடி பணத்தினைப் பெற்றிருக்கலாம் சுகபோகியாக வாழ்ந்திருக்கலாம். அன்றொரு காலத்தில் மகாத்மா காந்தியடிகளுக்கு தென்னாபிரிக்காவில் இனாமாக வந்த குவிந்த பொருட்களையெல்லாம் புறந்தள்ளி விட்டு வந்தது போல் வாழ்ந்தவர்தான் ஐயா அவர்கள்.

இவர் டாம்பிகத்தையும், ஆடம்பரத்தையும் விரும்பாமல் இருந்தவர் மட்டுமல்லாமல் நடைமுறையிலும் வாழ்ந்து காட்டியவர் இதற்கு எடுத்துக் காட்டாக மட்டுநகர் செல்வதானாலும் சரி, மற்றும் எங்கு செல்வதானலும் சரி வெயில், மழை, பனி, காற்று, என்று சலிக்காமல் சாதாரண மிதிசயிக்கிளிலே செல்வார். அவரது நிலையில் கார் வாங்கிப் பயணம் செய்யலாம். அல்லது முச்சக்கர வண்டியோ, மோட்டார் சைக்கிளிலோ வாங்கி அவைகளில் சென்று வரலாம். சரி அதுதான் சொந்த வாகனம் வண்டிகள் வாங்காவிட்டாலும் கூலிக்காவது பிடித்தப் போய்வரலாம். ஆனால், அவை அத்தனையுமில்லாமல் மிதிசயிக்கிளிலே பயணிப்பார்.

ஐயா அவர்களை சில நாட்களில் பயணம் செய்யும் போது வீதியிலும் பல நாட்கள் வீட்டிலும் சென்று காணும் நேரங்களிலெல்லாம் நான் சயிக்கிளில் பயணம் செய்யாமல் பஸ்சிலோ, முச்சக்கர வண்டியிலோ போய் வரலாந்தானே ஐயா என்ற கேட்டு மனம் நொந்தால், இல்லப் பாருங்க

இதெல்லாம் எனக்கு பெரும் கஸ்ரமாக இல்ல. அதனால், நீங்க கவலைப்படாதீர்கள். ஆனால், நீங்கள் உங்கள் வயதின் எல்லை கடந்து பணியாற்றுகின்றீர்கள் பயணம் செய்கிறீர்கள். அதனால், பணியையும் பயணத்தையும் குறையுங்கள். எந்நாளும் ஒரு நாளல்ல என்ற ஒரு தாய் உள்ளத்தோடு என் மீது இரங்கி நொந்து எனக்கு அறிவுரை கூறுவார்.

ஐயா அவர்கள் எழுத்துலகிலும் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என எழுதி வெளிவந்தாலும் நானறிந்தவரை எந்த ஒரு நூலிற்கேனும் வெளியீட்டு விழாச் செய்து பொருளையும் புகழையும் அடைய விரும்பியவரல்ல. அவரது ஆரைம்பதி மண் என்னும் வரலாற்று நூல் 2012ல் வெளிவந்தபோது நானாகச் சென்று ஐயா இந்நூலினையாவது, சிறப்பாக வெளியிடுவோம். இதற்கான அனைத்துப் பணிகளையும் நாள் என்று கேட்ட போதும் இல்லப் பாருங்க அதில் நான் சில உண்மைச் சம்பவங்களை எழுதியுள்ளேன். அதனால் சிலர் வெறுப்படைவார்கள். அந்த வெளியீட்டு விழாவினால் உங்களுக்கும் வீண் பிரச்சினை வரலாம். அதனால் அது வேண்டாம் பாருங்கள எனக்கூறி மறுத்து விட்டார்.

இதே போல் ஐயா எந்த ஒருவிழாவிலும் நிகழ்விலும் கலந்து கொண்டு தன்னை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற எண்ணித்தில் புகைப்படத்திற்கோ, செய்தித்தாள்களுக்கோ, முகங்கொடுத்தவரல்ல முன்பு கூறியது போல் நான் அறிந்த வரை நான் எழுதிய நூல் ஒன்றின் விமர்சனத்திற்கும் எனது பெறாமகன் கவிஞர் ஆழிவேந்தனின் நூலின் வெளியீட்டிற்கும் எமது பிறந்த ஊரான திருப்பழுகாமத்திற்கு இரு முறை வந்து அந்நூல்களின் நிகழ்வில் கலந்து கொண்டார்.

அந்த இரு நிகழ்விலும் ஒரு சொட்டு தேனீரோ சிற்றுண்டியோ உணவோ அருந்தியதுமில்லை உண்டதுமில்லை. இதனையிட்டு நான் ஒரு முறை குறைப்பட்டதும் அது சரியான பிழைதான் பாருங்க ஆனால் நான் அந்த வகையில் பழகிவிட்டேன் அது பிழைதான் பாருங்க என்னை மன்னித்துப்

கொள்ளுங்கள் என்றும் மன்னிப்பு கேட்டார்.

கடந்த 02.04.2017ல் மண்முனைவடக்கு கோட்டமட்டத்தில் மாணவர்களுக்கான "திருக்குறள் மனனப் போட்டியில்" "நீங்கள் நடுவராக வாருங்கள் இதனை மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் நடத்துகின்றது. எனவே, கண்டிப்பாக வாருங்கள் ஐயா" என்று தொலைபேசியில் வேண்டி நின்றபோது?,

நான் வரல்ல பாருங்க நான் முதியவன் பதிலுக்கு எனது மருமகன் ஆசிரியர் திரு. சுரேந்திரகுமாரை அழையுங்கள். அவர் அதில் ஆர்வமானவர் ஆற்றலுமுள்ளவர் இனிவரும், நிகழ்வுகளுக்கு எனக்குப் பதிலாக எனது ஞாபகமாக மருமகனை அழையுங்கள் எனக்கூறியதோடு ஆசிரியர் திரு சுரேந்திரகுமார் அவர்களை "திருக்குறள் மனனப் போட்டியின்" நடுவராக வேளைக்கு அனுப்பி வைத்தார்.

இதற்கு முன் நான் எழுதிய சிறியதோர் நூலான "நெஞ்சில் நிலைத்த நினைவுகள்" எனும் நூலிற்கு மதிப்புரை ஒன்றினை எழுதித்தருமாறு வேண்டினேன். ஒர் இரு தினங்களுக்குள் சிறப்பான மதிப்புரை ஒன்றினை எழுதி வழங்கியதோடு, காணும் நாட்களில் எல்லாம் நூலை விரைவில் முடியுங்கோ முடியுங்கோ என்றே கூறி வந்தார். மேலும் நோய் வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்த நிலையிலும் நன் பார்க்கச் செல்லும் நாட்களிலும் நூல் முடியவில்லையா என்றே கேட்பார்.

இதனால் இறுதியாக எனது நூலின் ஒரு பிரதியை மட்டும் அவசரமாக அச்சகத்தில் சொல்லி முடித்து கையில் எடுத்துக்கொண்டு, 26.06.2017 பிப. 5.00 மணியளவில் ஐயா இல்லம் சென்று, ஐயாவைப் பார்த்த போது ஐயா அவர்கள் தாங்க முடியாத வயிற்று வலியால் அனுகிக் கொண்டு படுக்கையில் கிடந்தவர். என்னைக் கண்டு தனது வலி வேதனை அனைத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டு வாருங்கள் என அழைத்தார்.

எனக்கு ஐயாவின் நிலையைக் கண்டதும் ஐயோ எனச் சத்தம் போட்டு அழவேண்டும் போல் இருந்தது எனது கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க அருகில் நின்ற ஆசிரியர் திரு. சுரேந்திரகுமாரும் கண்கலங்கினார். ஐயாவின் மூத்தமகள் வாய்விட்டு அழுதா. இந்நிலையில் நான் எனது கையில் கொண்டு சென்ற நூலைக் காட்டி அழுது நின்றேன். அதே நேரம் என்னையும் தேற்றி நூலினைப் பார்க்க படுக்கையில் கிடந்த ஐயா எழ எத்தணித்தார். நான் எழாதீர்கள் எனத்தடுத்தேன். இல்ல பாருங்க அதற்கான மதிப்பைக் கொடுக்க வேண்டும். என்று மேலும் எழுந்தவரைத் தடுத்துவிட்டு பக்கத்திலே நின்ற மருமகன். ஆசிரியர் திரு. சுரேந்திரகுமாரிடம் நூலினைக் கொடுத்தார்.

என்னதான் நடந்தாலும் ஐயாவின் நிலையை எண்ணி அழுதேன். அவர், எனது கையைப் பற்றிப் பிடித்து நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? எனக்கு இறப்பு என்பது பெரிய செயலல்ல. அதற்காக வருந்துபவன் நானல்ல. எனது நாடகம் முடிந்து விட்டது என்று தூக்குக்கயிற்றை முத்தமிட்ட சுதந்திரப்போர் வீரன் பகவத்சிங்காக குண்டையும், ஈட்டியையும் வேலையும் நெஞ்சில் தாங்கி வீரமரணமடைந்த மறவர்களைக் காண்பதுபோல் ஐயாவின் பேச்சிலும் செயலிலும் கண்டேன்! அதே நேரம் என்னையும் பன்னிப்பன்னித் தேற்றி வழியனுப்பினார்.

நான் 26.06.2017ல் பார்த்து வந்தேன் ஆனால் 30.06.2017ல் ஐயா அவர்கள் காலமான செய்தி எட்டச் செய்வதறியாது கதறி அழத்தான் முடிந்தது. பெயருக்கேற்ப வாழ்ந்து இயற்கை எய்திய ஐயா அவர்களின் ஆத்மா அமைதியடைய இயற்கையை வேண்டுகின்றேன்.

மூத்த இலக்கிய கர்த்தா

**ஆ.மு.சி. வேலழகன்**

# மானிடர் மேற்கொள்ள வேண்டியவைகள்

1. காலை 3 - 5 மணிவரை நுரையீரல் நேரம். காலைக்கடன் கழித்தல், உடற்சுத்தம், தியானம், கடவுள் வழிபாட்டுக்குரியவை.
2. காலை 5 - 7 மணிவரை பெருங்குடல் நேரம். காலை உணவுக்குரியது. அல்லாவிட்டால் பித்தநீர்சுரந்து, குடல் நோய் (அல்சர்) ஏற்படும்.
3. காலை 7 - 9 மணிவரை முன் சாப்பிட்டால் குடலுக்குள் செல்லும் கல், மண், மயிர் அரைக்கப்படும்.
4. காலை 9 - 11 மணிவரை மண்ணீரல் நேரம். சாப்பாடு தவிர்த்தல் நலம் தரும்.
5. நண்பகல் 11 - 13 மணிவரை இதய நேரம். கோபம் கொள்ளல் கூடாது. நோயினால் உடல் பாதிக்கப்படும். உணவு சாப்பிடுதல் நன்று.
6. மாலை 13 - 15 மணிவரை உடல் கழிவு வெளியேற்றம். ஒருவர் சராசரி நாளொன்றுக்கு இருமுறை மலம் கழித்தல்; சிறுநீர் பகல் ஐந்து தடவை; இரவு ஒரு தடவை கழிக்க வேண்டும். அல்லாவிட்டால் உடல் நோயுடையவராக இடமுண்டு.
7. மாலை 15 -17 மணிவரை சிறுகுடல் நேரம். உடலுக்கு ஓய்வு கொடுத்தல் நன்று.
8. மாலை 17 - 19 மணிவரை மூளை நேரம். எதிர்கால, நாளைய வேலை விடயங்களைத் திட்டமிடல்
9. இரவு 19 - 21 மணிவரை உணவு சாப்பிடல், உறக்கத்துக்குரியது.
10. இரவு 21 - 23 மணிவரை உறங்குதல் உடலுள்ள ஆரோக்கியத்திற்குகந்தது.
11. பின்னிரவு 23 - 01 மணிவரை பித்தப்பை சுரக்கும் நேரம்.
12. முன்னிரவு 01 - 03 மணிவரை கல்லீரல் நேரம் இந்த நேரம் வரை உறங்குவது உடலுக்கு நல்லதாகும்.

# ஆரையம்பதி தமிழ் சமூகம்

க. சபாரெத்தினம்

தமிழ் பேசும் நல்லுலகில் ஈழத்தின் வகிவாகம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அதிலும் அதன் வடக்கு, கிழக்கு மாநிலங்கள் தொன்மையாலும் பண்பாட்டு வளங்களாலும் அதி சிறப்புற்ற பிரதேசங்களாகும். இங்கே தமிழர்களும், தமிழ் பேசும் இனமான முஸ்லிம்களும் பெரும் பான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். தமிழர்கள் மத்தியில் குலங்கள், கோத்திரங்கள், வருணங்கள் என்று பல பிரிவினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலர் இலங்கையின் பூர்வீககுடிகளாக தோற்றம் பெற்ற இயக்க, நாகர் என்போரின் வழித்தோன்றல்களாகவும் வேறு சிலர் தென்னிந்திய நாட்டு மன்னர்கள் இலங்கையை கைப்பற்றி ஆட்சி செய்ய வந்த காலத்தில் அவர்களுக்கு ஊழியம் செய்து வந்தவர்களாகவும் படைவீரர்களாகவும் இங்கே வந்து தங்கிவிட்டோரின் பரம்பரையினராகவும் இருக்கின்றனர். இவ்வாறான குலவிருதினர் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும்வேறு சிலர் அவர்களது பூர்வீக சுயஅடையாளம் சரியாக வெளிப்படுத்தப்படாத நிலையில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான சமூகத்தை சேர்ந்தோர் சனத்தொகையில் குறைவானவர்களாகவும் ஏனையவர்களால் வேண்டும் என்றே மறைக்கப்பட்ட வரலாற்றை கொண்டிருப்பவர்களாகவும் இருந்து வருவதனால் இவர்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு அறிக்கை அவணப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இராவணன் ஆட்சி நிறைவடைந்த பின்னர் இலங்கையில் இயக்க வம்சத்தில் வந்த குவேனி அரசு செய்து கொண்டிருந்த காலம் கி.மு. 543இல் இந்தியாவின் வங்காள தேசத்தில் இருந்து விரட்டிய அடிக்கப்பட்ட விஜயன் தன் தோழர்கள் 700 பேருடன் பாய்க்கப்பல் மூலமாக இலங்கையின் தம்பவன்னியை வந்தடைந்தான் என்பது வரலாறு.

இதன் பிறகு கி.மு. $2^{ம்}$ நூற்றாண்டு தொடக்கம் கி.பி $12^{ம்}$ நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் தென்னிந்திய தமிழ் அரசர்களின் படையெடுப்பு அடிக்கடி இடம்பெற்று வந்ததோடு, அவர்கள் இலங்கையில் அரசதானிகளை அமைத்தும் சிற்றரசர்களுக்கு முடிசூட்டி வைத்து தாயகம் திரும்பி சென்றுள்ள வரலாறுகள் வேறு கிடைக்கப்பெற்றுள்ளன.

தமிழ் அரசதானிகள் அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட போது, யுத்தத்தில் தோற்றோடிச்சென்ற சிங்கள மன்னர்கள் தஞ்சம் புகுந்த இடமாக மாஹம போன்ற தென்பகுதி நகரங்கள் விளங்கின. இங்கிருந்து பொலன்னறுவை, அநுராதபுரம் ஆகிய இடங்களை சென்றடைவதற்கு அப்போது அவர்களுக்கு தாழ் சமவெளியான மட்டக்களப்பு மாநிலம் சிறந்ததொரு பாதை ஊடாகமாக அமைந்திருந்தது.

இதனால், மட்டக்களப்பு பிரதேசத்தில் வாவியை அண்மித்த நீர் நிலை பகுதிகளான ஆரையம்பதி, கல்லாறு, அமிர்தகழி ஆகிய இடங்களில் தென்னிந்திய சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் பாதுகாப்பு கருதி "இருமுனை ஆற்றுக் காவற்படை" நிறுவப்பட்டு அங்கே கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காவற்படையினர், காலப்போக்கில் அவ்விடங்களிலேயே நிரந்தரமாக தங்கி தமது வாழ்விடமாக்கிக் கொண்டனர் (ஆதாரம் மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள் - ஈழத்து பூராடனார்)

இலங்கையின் பூர்வீக குடிகளை சராமலும் இடைநிலை சிங்கள வம்சத்தை சராமலும் மற்றும் ஒரு தனித்துமான குழுமமாக தொடர்ந்து வாழ்ந்து வந்த இவர்கள், ஆற்றோரம் தங்கள் குடியிருப்புக்களை ஏற்படுத்தி கொண்டிருந்தாலும் அவர்களது மூல வரலாற்று பின்னணி தெரியாததனால் ஏனையோரால் வெறுமனனே "கரையார்" என்றே

அழைக்கப்பட்டு வந்தனர் பின்நாளில் கரையார் என்ற பதம் 'மீனவர்' என்ற பொருள் வெளிபாடடைந்ததாக அமைந்துவிட்டது. ஆயினும் மட்டக்களப்பு மான்மீகம் போன்ற கிழக்கின் வராலற்றை உணர்த்தும் நூல்களில் இவர்கள் ஏனைய குடிவம்சத்தாரிலும் பார்க்க உயர்வான இடத்தையே அளித்து கௌரவிக்கப்பட்டள்ளமை கவனிக்கத்தக்கது.

இத்தகையதொரு, சமூகத்தின் இருப்பையும் அதன் பூர்வீக வரலாற்றையும் வேண்டிய ஆதாரங்களுடன் மெய்ப்பிப்பதே இவ் ஆய்வு கட்டுரையின் நோக்கமாகும். இதனை " சமூகத்தை ஆவணப்படுத்துதல்" என்ற உபதலைப்பின் கீழ் ஆய்வு செய்யமுடியும்.

**(2013 இல் கொழும்பில் இடம்பெற்ற தமிழ் ஆவண மாநாட்டில் (Tamil Documentation Conference) அமரர் க. சபாரெத்தினம் முன்மொழிந்த மாநாட்டு முன்மொழிவுக் கோவையிலிருந்து)**

# IN MEMORY OF GREAT "SABA"

While working at the Department of Education, Batticaloa as a clerk, we call him as "SABA" instead of Sabaratnam. He was born , bread and educated at Arayampathy which is his native place. Later he received his higher education at the Shivananda Vidyalayam, Batticaloa, which is a mission school of Sri Ramakrishna.

While working in the department of education, Batticaloa, he was very sincere, honest and trustworthy. "SABA" was very punctual and dedicated to his service. He could handle any type of work in this department. He was a very jovial person moved with everyone in a friendly manner cracking jokes.

We have noticed him on several occasions, that he never got wild or angry with any person in the Dept. of Education as well as outside. He is a very talented person not only in Tamil but also parallely in English language too.

"SABA" was always proud of saying that he was a dedicated student of Shivananda and also added that he will never forget the famous Shivananda Vidyalaya, and the teachers was taught him.

In the meantime, when we asked him "SABA, why don't you purchase a plot of land in Batticaloa town", at the time "Saba" laughingly and vehemently replied, "why should I leave

Arayampathy, my native place". Finally he bought a plot of land of his own at Arayampathy. This incident was very much surprised and we told him that he was very faithful and proved his sincerity towards his own native place Arayampathy. In this respect, I think there is no such a person as Saba who was very faithful sicnere and loved so much to his native place Arayampathy. As a result, he wrote a very famous book. "Arayampathy mann" (Arayampathy soil) where he described the entire history of Arayampathy and its famous Temples and schools with the long history of those temples and schools.

Saba was an amiable person with simple personality who readily extended his assistance, valuable advice and, guidance to anyone who sought his counsel. He never used any harsh words crossing his lips. He always believed in playing straight bat, he was very good friend with his colleagues and above all he was a great person with good personality with great helping mentality.

He was loved by one and all
Let his soul Rest in peace

**S. STANISLAUS**
Attorney - at - law

# ஈசன் திருவடியில் என்றென்றும் வாழட்டும்

ஆயபல கலை வளரும்
ஆரையூர் மண்ணீன்ற
தூயபல எழுத்தாளர்
துறைசார்ந்த கவிஞர்களில்
நீயுமொரு தமிழாளன்
நிலையாக பணிசெய்வாய்
என்றிருந்த வேளையிலே
இயமன் குறுக்கிட்டு
வென்றுவிட்டான் உயிர்பறிக்கும்
வேட்டையிலே என் செய்வோம்
நிமிர்ந்த நடையோடும்
நேரான கொள்கையோடும்
துணிந்து எதிராடும்
சொற் சிலம்பன் நீயன்றோ
அன்பான மனைவியோடு
அழகான மகளிரண்டு
பண்பான மருமக்கள்
பாசமுள்ள சோதரர்கள்
உற்றார் உறவினரை
ஒருங்கிணைத்து அகவாழ்வில்
வெற்றி கண்ட உனை நினைத்து
விழிநீர் சொரிகின்றார்
இரு விரலால் நீ தொட்டு
எழுதி வந்த ஆக்கங்கள்
அரிய பல சிறுகதைகள்
ஆழகு மிக்க பல கவிதை
பொர்ருள்பொதிந்த கட்டுரைகள்
புகழ் மிக்க நாடகங்கள்
எல்லாமே கல்வெட்டாய்
என்றென்றும் நிலைநிற்கும்
அன்போடு இல் வாழ்வை
ஆட்சி செய்த அரசரெத்தினம்
அகம் தேடி வருவோரை
ஆதரிக்கும் நேசரெத்தினம்
நல்லறிவு நூலையெல்லாம்
நல்கிவந்த ஞானரெத்தினம்
நலிவுற்ற மக்களுக்கு
நயந்தளித்த தருமரெத்தினம்
குற்றத்தை சொல்லாலே
கொத்திவந்த நாகரெத்தினம்
கற்றவர்கள் மத்தியிலோர்
கனவான சபாரெத்தினம்
எம்மை விட்டு பிரிந்த துயர்
எல்லோருக்கும் இருந்தாலும்
மாண்டார் வருவதில்லை
மாமறையின் தீர்ப்பிதனை
தாண்டி உயிர்பெற்றோர்
தரணியிலே யாருமில்லை
ஆதலினால் நாமமைதி
கொள்வோ மவரென்றும்
ஈசன் திருவடியில்
என்றென்றும் வாழட்டும்!

மூத்த கலைஞர
மூனாக் கானா

# இந்து சமயத்தில் இல்லாதது எது?

அர்த்தமும் அறிவும் மிக்க இந்துநெறி அறிவிலிகளின் செய்கைகளுக்கு உட்பட்டு அர்த்தமற்ற இந்து மதமாக மாறிக் கொண்டிருக்கிறது. இந்தமதம் மானிட சமூகத்திற்குத் தெரிவிக்காத கருத்து எது? எதுவுமே இல்லை. ஒரு மதம் என்ற நிலையில் இருந்து கொண்டு தெரிவிக்க வேண்டிய எல்லாவற்றையுமே எடுத்து விளம்பியுள்ளது.

மனிதனுக்கு பரம்பொருளைப் பற்றியும் அதனை அடைவதற்கு பக்தி செலுத்தும் முறைமையும் மடடும் தானா கூறியுள்ளது? இல்லை வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் அது நுட்பமாக அலசி ஆராய்ந்து நற்கருத்துக்களை நயம்படவே எடுத்துக் கூறியுள்ளது. பிள்ளை பிறந்துவிட்டதா? மாங்கல்ய நிகழ்ச்சியா? கர்ப்பினியா? மூப்பா? பிணியா? சாக்காடா? குடும்பத்தலைவனுக்குள்ள கடமைகளா? இல்லறத்தானுக்குரிய கடமைகளா? பொதுக்கடமைகளா? இவை எதைத்தான் அது விட்டு வைத்திருக்கிறது? எல்லாவற்றையுமே எடுத்தியம்பிய இந்துமதம் தன்னை விட்டு சாதகர்கள் அகன்று போகாமல் இருக்கத்தக்கதாக தனக்கென்று ஒரு தற்பாதுகாப்பு அரண் எதையும் புகுத்தியுள்ளதா? இல்லை என்றால், இல்லாத ஒன்று இந்து மதத்தில் இது ஒன்று தான்.

"வான் முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறைவில்லா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

மேற்கூறிய இந்தப் பாடல் ஒன்றே இந்து மதத்தின் உயர்ந்த இலட்சியத்தை உலகமும் உலக மனிதர்களும் அறிந்து கொள்ளப் போதுமானது தர்மம் ஒரு இந்து குறிப்பிட்ட சமூகத்தையோ இடத்தையோ அரசாங்கத்தையோ ஆட்சியையோ குறித்துக் கூறாமல் உலகமெங்கும் வாழும் மக்களின் வாழ்க்கையும் வளமும் மேலோங்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றது. அதுமட்டுமல்ல, அறநெறிகளை உள்ளடக்கிய சைவமதம் பரவவேண்டாம் அதில் பொதிந்துள்ள மேலானநீதி பாரெல்லாம் விளங்கட்டும் என்றே கூறுகிறது. இப்படிப்பட்ட ஒரு சமயம் உலகில் இந்துதர்மத்தை விட வேறேது? இது அர்த்தமற்ற ஒரு மதமா?

**(அமரர் க. சபாரெத்தினத்தின் ஆறாவது நூலான**
**"இந்து மதத்தின் இன்றைய தேவைகள்"**
**என்ற வெளியீட்டில் உள்ள ஒரு பகுதியாகும்)**

# என்றும் சாகாமல் வாழுகின்றாய்

கூர்ந்த ஞானமும் குன்றாத மனவளமும்
கொள்கைப் பிடிப்பும் கூட்டுக்குடும்ப நேசிப்பும்
சோர்ந்து போகாது சுறுசுறுப்பாய் நிமிர்ந்து நின்று
சிந்தைத் தெளிவோடு சத்தான இலக்கியம் பலபடைத்து
ஆர்வமோ டெதனையு மாராய்ந்து எம் மண்ணின் புகழுக்குவித்திட்ட
எழுத்தாளச் சிற்பி;யே! ஏற்றமுடைவாழ்வுக் கிலக்கணமாய்
ஓர்மையோடு வாழ்ந்தாய்! எவ்வேலையு மச்சம் தவிர்த்து
உதய சூரியனாய் ஒளிதந்தாய்! உன்மறைவு மண்ணுக்கு பேரிழப்பு!

ஆங்கிலபுலமை ஏற்றமுள்ள தமிழை வளர்தெடுத்த பெருமை
எவருக்கும் வராத அற்புதப் படைப்பாற்றலும்
ஓங்கிவளர் மூங்கில்போல் உயர்ந்து வளர்ந்ததே
எழிலான கவிதைகள்! இதயத்தை தொடுகின்ற சிறுகதைகள்
ஆங்கிலக் கட்டுரைகள்! ஏற்றமுள்ள சிந்தனைக் கருவூலமாம்
ஆக்கங்கள்! நாடகங்கள்! இளமுள்ளங்களைச் சீர்திருத்தும்
சிங்காரச் சிறுவர் இலக்கியமும் எமக்களித்த வாசனே
சாகாவரம் பெற்ற இலக்கியம் தந்து சாகாமல் வாழுகின்றாய்.

பொதுவுடமை நாடாம் ரஷ்சியாவில் தூதுவச் சேவையிலே
பெருமையோடு கடமையாற்றி அம்மண்ணைப் படம்பிடித்து
பத்தியிலக்கியமாய் பயணக்கட்டுரை பக்குவமாய்ப் படைத்தாய்
பார்போற்றும் லெபனானை எம் கண்முன்னே படமாய்விரித்தாய்
எத்திக்கும் உங்கள் புகழ் இமயமாய் ஓங்கச் செய்ய
ஆரையூர் மண்ணின் வரலாற்றை ஆவணப்படுத்திய ஆய்வாளா!
உத்தம குணத்தோடு மனைவி மக்க கண்கலங்காது காத்தாய்
காலத்தால் அழியாது! கோலத்தால் குறையாது! என்றும் நிலையானாய்!

ஆக்கவிலக்கிய எழுத்தாளர்,
ஆரையம்பதி ஆ. தங்கராசா

# அமரர் க. சபாரெத்தினம் குறித்து 2017.07.03. ஆந் திகதி இடம்பெற்ற இதயங்கள் கனத்த இரங்கலுரைகளில் ஒலித்தவை....

"மனத்தாலும் செயலாலும் அனைத்துக் காரியங்களையும் செய்து தமது பிரதேச மக்களிடத்தே நீங்காத இடத்தினைப் பிடித்து, மறைந்தும் மறையாமல் இருப்பவர் தான், அமரர் சபாரெத்தினம் அவர்கள். மண்ணைவிட்டுப் பிரிந்தாலும் மனித மனங்களை விட்டகலாத மாமனிதர். அமரர். சபாரெத்தினம் எவ்வித ஆடம்பரமும் விளம்பரமுமின்றி வாழ்ந்தவர். என்பதை இவரது வாழ்க்கைச் சரித்திரத்தை புரட்டிப் பார்ப்பவர்கள் மறைக்கவோ மறுதலிக்கவோ முடியாது...."

மூத்த கலைஞர் திரு.மூ.அருளம்பலம்
(இரங்கலுரை நிகழ்வுக்கு தலைமை வகித்தவர்)

"ஒட்டு மொத்தமான தமிழுலகத்திற்கு பணிசெய்தவர்களுள் மிகவும் முக்கியமானவராக அமரர். சபாரெத்தினத்தை காணமுடிகிறது. தமிழிலக்கிய வளர்ச்சியிலே அன்னாரது இலக்கிய முயற்சிகள் முக்கியமானவை. இவரது சில செயற்பாடுகள் ஆரையம்பதிக்கு பெருமையளிப்பவை; இன்னும் சில செயற்பாடுகள் ஈழத்திற்கு பெருமையளிப்பவை; இன்னும் சில செயற்பாடுகள் தமிழ்பேசும் நல்லுலகத்திற்கு பெருமையளிப்பவை. அந்த விதத்திலே, இவர் இலக்கிய வரலாற்றிலே சமூக வரலாற்றிலே நிச்சயமாக இடம்பெறுக் கூடிய ஒருவர். அந்த அடிப்படையிலே இலக்கிய உலகிலே நிரந்தரமானதொரு இடம் அமரர் சபாரெத்தினத்திற்கு இருக்குமென நிச்சயமாக நம்புகிறேன். எழுத்தாளர் நண்பர்கள் சார்பிலே அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்"

பேராசிரியர் செ. யோகராசா
கிழக்குப் பல்கலைக்கழகம்

"அமரர் சபாரெத்தினத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லப் போனால், நேர்மையும் விடாப் பிடியும் அதாவது, உண்மைக்காகப்

போராடக் கூடியவர். அவரது நேர்மைக்கு மாறாக, குறுக்காக யாராவது நின்றால் அவர் நக்கீரராகிவிடுவார். பொறுமையும் நேர்மையும் மிக்க பெரியவர் அவர் இன்னும் சில காலம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தால் ஏராளமான தொண்டுகளைச் செய்திருப்பார்...."

**மூத்தகலைஞர் மு. கணபதிப்பிள்ளை**

"அமரர் கணபதிப்பிள்ளை சபாரெத்தினத்தின் இழப்பை நினைக்கின்ற போது நான் பாரிய துயரமடைகிறேன். அந்த வகையில், "தோன்றிற் புகழோடு தோன்றுக...." என்கின்ற வள்ளுவரது வாக்கிற்கிணங்க, இங்கு தோன்றிய சபாரெத்தினம் ஐயா அவர்கள் மறைந்தாலும் கூட அவரை நினைத்துப் பேசக்கூடிய விதத்தில் பல தடயங்களைப் பதித்துச் சென்றிருக்கிறார். உண்மையில் பார்க்கின்ற போது உண்மை அவரிடமிருந்தது ; நேர்மை அவரிடமிருந்து ; தூய்மை அவரிடமிருந்தது ; ஓர்மை கூட அவரிடமிருந்தது, ஆரையம்பதி மண்ணில் அன்னார் பிறந்தது ஆரையம்பதிக்கு பெருமை சேர்க்கின்ற விடயமாயிருக்கிறது. பெருமைக்குரிய கனவானை, உத்தமனை நாங்கள் இழந்து தவிக்கின்றோம். வாழ்க்கையின் மூலமாக நல்ல பண்புகளை; நல்ல தடயங்களை எமக்கு வகுத்து தந்திருக்கின்றார். இப்படிபட்ட மனிதர்களின் கால்களைத் தொட்டு வணங்கினாலும் கூட நாம் குறைந்து விட மாட்டோம். இப்படிப்பட்ட கனவானை உயர்ந்த மனிதனை நான் என்னுடய மனதிலிருந்து என்றுமே அழித்து விடுவதற்கு தயாராக இல்லை. இப்படிப் பட்ட மனிதர்களை, புனிதர்களை சந்திப்பதற்காக நான் ஏங்கிக் கொண்டிருக்கிறேன். அன்னாரது, இழப்பு தமிழ் நெஞ்சங்கள் அனைவரையும் நோகடிக்கச் செய்திருக்கிறது. எது எப்படியாக இருந்தாலும் பிறப்பு உண்டானால் இறப்புண்டு என்பதற்கமைய, அவரது விதி இவ்வாறு அமைந்து விட்டது. அவரது நல்லபண்புகளை மனதில் ஏந்தி நடப்போம். அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்"

**கௌரவ. ஞா. ஸ்ரீநேசன்,**

பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு மாவட்டம்.

"அமரர் சபாரெத்தினத்தின் எழுத்து, அவருடைய நேர்மை, மனித நேயம் எவருக்கும் வராது. அவரைப் போல் ஓர் சிறந்த எழுத்தாளரை இந்த ஆரையம்பதி மண் காணமுடியாது. ஒரு சிறந்த அற்புதமான எழுத்தாளராக திகழ்ந்தார். அன்னார் ஆங்கிலத்திலே ஒரு சிறந்த எழுத்தாளரென்பது இங்கிருக்கும் பலருக்கு தெரியாது. அன்னாரது 'ஆரையம்பதி மண்' எனும் நூல் அவரது நாமத்தை எப்போதுமே சொல்லிக் கொண்டிருக்கும் சிறந்த நூலாகும். இப்படிப்பட்டதொரு மேதையை இழந்தது பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்."

மூத்த எழுத்தாளர்

**ஆ. தங்கராசா**

"ஓம்.... எல்லோருக்கும் வணக்கம். திருவாளர் சபாரெத்தினம் அமரத்துவமடைந்திருக்கிறார். அவர் என் குடி வழித்தம்பியாவார். திருமணத்தின் மூலமாக எனக்கு சகலனுமாவார். அமரர் சபாரெத்தினத்தினுடைய குணாதிசயங்களைப் பற்றி இங்கு அறிவு மிக்கவர்கள்; சொல்லத்தக்கவர்கள் சொல்ல வேண்டிய பல விடயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். திருவாளர். சபாரெத்தினம் வாழையடி வாழையாக வந்தவர். நாகப்பர் கணபதிப்பிள்ளையின் பண்பான பாரம்பரியத்தில் பிறந்தவர். சபாரெத்தினத்தின் திறமையைப்பற்றி, சிறப்புக்களைப்பற்றி ஆய்வு நுட்பத்தைப்பற்றி எல்லோரும் ஒருவருக்கொருவர் உடன்பட்டே பேசியிருக்கிறார்கள். எனென்றால், இது தான் உண்மை... இந்த வகையிலே அவர் புகழ்மிக்க வாழ்வு வாழ்ந்திருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். இக் குடும்பத்தின் சார்பில் துயரில் பங்குகொள்ளும் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்"

மூத்த எழுத்தாளர்,

**திரு. சி. க. பொன்னம்பலம்**

"அமரர். சபாரெத்தினம் அவர்களது இழப்பை நினைக்கும் போது உள்ளம் நெகிழ்கிறது. இங்கு பேசிய பலருக்கு தெரியாத விடயம் எனக்குத் தெரிந்த விடயம் என்னவென்றால், அமரர் அவர்கள் ஒரு நுண்ணறிவாளன் என்பதாகும். அந்தக் கணத்திலே பகிரங்க மேடையில் நுண்ணறிவு வினாக்களுக்கு விடையளிக்கும் ஆற்றல் பெற்றவர். அதில் அவரும் ஒருத்தர் என்பதில் மனம் நிறைகிறது. எமது கலாமன்றத்தால் யாத்த கவிதையை வாசித்து விடைபெறலாம் என நினைக்கிறேன்....."

" சலிக்காத உழைப்பு

சாயாத வீரம்......"

கலைஞர்

திரு.ந. கந்தசாமி

"ஐயாவைப் போன்றதொரு அற்புத மனிதனை நான் என் வாழ்வில் ஓரிருவரைத்தான் சந்தித்துள்ளேன். இந்த சந்திப்பு எனக்கு நீடிக்க வில்லை. ஐயா அவர்கள் கடைப்பிடித்த நேர்மை, நியாயம் சகலதும் விழுப்பம் தரும் எனக் கூறி விடைபெறுகின்றேன்"

மூத்த எழுத்தாளர்

ஆ.மு.சி. வேலழகன்.

"ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், இரஷ்ய மற்றும் லெபனான் நாடுகளுக்கான இலங்கை தூதரக ஓய்வு பெற்ற அதிகாரியும் எனது மாமனாருமான அமரத்துவமடைந்த, மதிப்புக்குரிய கணபதிபிள்ளை சபாரெத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து, உதவியோருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டிருப் போருக்கும் மற்றும் இவ்விதமான இரங்கலுரையினை நிகழ்த்தியோருக்கும் என் குடும்பத்தின் சார்பில் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்"

திரு. சி. சுரேந்திரகுமார்.

(அமரர். க. சபாரெத்தினம் குடும்பத்தின் சார்பில்)

# மரண அறிவித்தல்

மலர்வு 1946 04 06



உதிர்வு 2017 06 30

## அமரர். கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்

(ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், முன்னாள் இரஷ்ய, லெபனான் நாடுகளுக்கான இலங்கை தூதரக ஓய்வு பெற்ற அதிகாரியுமாவார்)

ஆரையம்பதி வேளாளர் தெருவைப் பிறப்பிடமாகவும் செல்வாநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சபாரெத்தினம் அவர்கள் 2017.06.30ஆந் திகதி அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (ஓய்வு நிலை தலைமை ஆசிரியர்), தங்கமணியம்மாள் தம்பதிகளின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்ற சீனித்தம்பி (ஓய்வு பெற்ற உப தபால் அதிபர்), இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி. சத்தியபாமா அவர்களின் அன்புக்கணவரும், சண்முகப்பிரியா, சத்தியபிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயரெத்தினம், ஞானலோசனி, சிவநேசராஜா, பவானி, ஞானரெத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சுரேந்திரகுமார் (ஆசிரியர் மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம்), ரூபாகரன் (கணக்காளர் பிரதேச செயலகம் மண்முனைப்பற்று), நேசசிறி, சிறிதர்ஷினி, ஜெயப்பிரேமினி, யதுர்ஷனன், யதுர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், தயாபரன் (ஓய்வு நிலை பாடசாலை கட்டடப்பரிசோதகர்), காலஞ்சென்ற பரமேஸ்வரி, லோகேந்திரன், சிவநேசம், இராஜேஸ்வரி, தனலட்சுமி, நளினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற டாக்டர். முருகப்பன், சி. க. பொன்னம்பலம், ரவிஆனந்தன், கலைமதி ஆகியோரின் சகலனும், கோகிலாதேவி, லோகினிதேவி, காலஞ்சென்ற ஹரிகரன், அனுலாதேவி, சுதர்சினிதேவி, கேதாரேஸ்வரி, நிர்மலன், சங்கரி, விஜயசிறி, விஜயதாஸ், விஜேந்திரன், தனுஷியா ஆகியோரின் சித்தப்பாவும், பஜீந்திரா, சாயிசங்கர், தருணிக்கா, திஷாந், நித்தியாயினி, நிலாயினி, ரவிசங்கர், டாக்டர். சுரேஷ் ஆகியோரின் பெரியப்பாவும், சிவசன், ஜெய்ஆகாஷ், லதீஸ், சர்பிக்கா, சரண், ரெசிக்கா ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 2017.07.03 ஆந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து ஆரையம்பதி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றோம்.

தகவல்,
பிரிவால் துயருறும் அன்னாரது
குடும்பத்தினர்,
ஆரையம்பதி.

2017.06.30 ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த கலாபூஷணம்
கணபதிப்பிள்ளை சபாரெத்தினம் அவர்கள் பற்றிய

# நினைவஞ்சலி

மலர்வு 1946 * 04 * 06



உதிர்வு 2017 * 06 * 30

## அமரர்.கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்

ஆரையம் பதிக்கொரு அணியெனத் திகழ்ந்தவன்;
அருட்டமிழ் உணர்ந்து அரும்பணி புரிந்தவன்;
சீருறு வாழ்வினன்; செழிப்புற வாழ்ந்தவன் ;
செழுந்தமி ழறிந்தவன்; திருத்தகு புலவன்;
ஊர்ப்பற் றுடையவன் ; உறுபொருள் பகர்ந்தவன்;
உயர் மொழிக் கவிஞன்; உற்றவர் தலைவன்;
நேர்வழி யாளன்; நினைப்பவை முடிப்பவன்;
நித்தமும் கட்டுரை, கவிதைகள் புனைபவன்;
கூர் மதியாளன்; குணத்தினி லுயர்ந்தவன்;
குவலயம் போற்றும் கொள்கை யுடையவன்;
சேர்ந்தவர்க் கினியவன்; சீரெழு பண்பினன்;
செந்தமி ழோடுயர் ஆங்கிலம் பயின்றவன்;
கார்முகி லெனக்கவி மழையினைப் பொழிந்தவன்;
கண்ணகி காவியத் தொகுப்புரை தந்தவன்;
பாவினிற் சிலகால் பன்னாட்டுப் பணிச்
சேவையில் இணைந்து செயற்பட் டுயர்ந்தவன்;
ஆர்அறி வரிவன் அவனியை விட்டு
அவசரமாக அகன்றிடு வானென?
சேர்க அவன் சிவன் திருத்தாள் மலரடி!
சிறப்புற் றோங்குக அவன்வழிச் செல்விகள்!!!

சி.க.பொன்னம்பலம்

## சபா அண்ணைக்கு சமர்ப்பணம்

அன்னை மடியில்

1946 * 04 * 06



இறைவன் அடியில்

2017 * 06 * 30

## அமரர். கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்

பண்பான சபா அண்ணனே !
பக்கத்து வீட்டில் நீங்கள் இருந்து
பற்பல அறிவுரைகள் கூறி
பகிடிகள் பல பேசி எங்களுடன்
பக்குவமாய்ப்பழகி வந்தீர் – இப்போது
எங்களை துக்கத்தில் ஆழ்த்திவிட்டு
துயில்கொள்வதென்ன சபா அண்ணனே...!

கல்வியில் சிறந்த ஆசான் நீங்கள்
கவிதையில் சிறந்ததோர் கவிஞன்
கலாசார விழுமியங்களை – என்றும்
கருத்தோடு சொல்லித்தந்தீர் – என்
கவிதைக்கும் புகழாரம் அள்ளித்தந்தீர்
கண்கெட்ட காலனவன்
கடுகதியாய் உங்கள் உயிரை
களவெடுத்து சென்றதென்ன சபா அண்ணனே !

"இதயத்தாமரை" உங்கள் முதல் நூல்
இதயம் கனக்குதைய்யா உங்கள் பிரிவால்
இனி உன் போல் யார் உண்டு
இலக்கிய இலக்கணத்தில் தமிழும் ஆங்கிலமும் – பேசவும் எழுதவும்
இறுதியாக நீங்கள் என்னிடம் சொன்ன வாசகம்
எழுதுவதற்கு என் பேனா மறுக்குதே சபா அண்ணனே !

ஆரையூர் பெற்றெடுத்த
அரும்பெரும் சொத்து நீங்கள்
"ஆரையம்பதி மண்" உங்கள்
ஆத்மாவின் இறுதி நூல்
ஆரையூரின் கல்வெட்டு
இனி யார் தருவாரைய்யா...?
இப்படி ஒரு நூல் எங்களுக்கு
இறைவனை வேண்டுகிறேன் – நீங்கள்
இன்னுமோர் பிறவி பெற.........

உங்கள் பிரிவால் துயருறும்
தர்ஷி மகேசன் குடும்பத்தினர்
செல்வாநகர், ஆரையம்பதி.

# வம்ச விருட்சம்

கணபதிப்பிள்ளை + தங்கமணியம்பாள்

விஜயரெத்தினம்
சபாரெத்தினம்
ஞானலோசனி
சிவநேசராசா
பவானி
ஞானரெத்தினம்

சீனித்தம்பி + இராசம்மா

பரமேஸ்வரி
சிவநேசம்
சத்தியபாமா
இராஜேஸ்வரி
லோகேந்திரன்

சண்முகப்பிரியா + சுரேந்திரகுமார்

சிவசன்

சத்தியப்பிரியா + ரூபாகரன்

# நன்றி நவிலல்

பாசத்தின் உறைவிடமாகவும் எமது இல்லத்தின் ஒளி
விளக்காகவும் ஒளிர்ந்து 2017.06.30 இல்
இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர். கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு,
உடன் வந்து உதவி செய்து ஆறுதல் கூறியவர்களுக்கும்,
நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம்
கூறித் தேற்றியவர்களுக்கும், மலர் மாலைகள், மலர்
வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்,
இரங்கல் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இரங்கல்
உரை நிகழ்த்தியவர்களுக்கும், இறுதிச் சடங்கிலும்
தகனக்கிரியைகளிலும் பங்கு கொண்ட அனைவருக்கும்,
துயர்பகிர்வு பாதாதைகள் காட்சிப்படுத்திய
தாபனங்களுக்கும், சங்கங்களுக்கும், பல்வேறு வழிகளில்
உதவி புரிந்தவர்களுக்கும் இப் புத்தகத்தை அழகுற
வடிவமைத்து அச்சு வாகன மேற்றிய
ஆதவன் அச்சகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

இல. 177A,
6ம் குறுக்குத் தெரு
செல்வாநகர், ஆரையம்பதி.
065 2246781



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்.

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு, 065 222 2076.